# இந்து சமயம்
# (வினா-விடை)

**சுவாமி ஹர்ஷானந்தர்**

**வெளியிடுபவர்:**
**தலைவர்**
**இராமகிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை)**
**40, இராமகிருஷ்ணா வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு – 06.**
**பதிப்புரிமை பெற்றது**

**முதற்பதிப்பு: ஜுலை 2003**

**விலை: ரூபா 5.00**

## பதிப்புரை

*சுவாமி ஹர்ஷானந்தர் எழுதிய "இந்து சமயம் வினா-விடை" என்னும் நூலை வெளியிடுவதில் பெரு-மகிழ்ச்சியடைகிறோம். இந் நூலாசிரியர் இராமகிருஷ்ண சங்கத்தின் மூத்தத் துறவிகளில் ஒருவராவார். இவர் இந்து சமய நூல்களில் ஆழ்ந்த புலமை கொண்டவர். ஆங்கிலம், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் பல சமய நூல்களை எழுதியுள்ளார். தற்சமயம் இவர் "இந்து சமய கலைக்களஞ்சியம்" எனும் நூலை எழுதிக் கொண்டிருக்கிறார். அது ஐந்து தொகுதிகளில் வெளிவர உள்ளது. இவரது நூல்களில் சில பிரெஞ்சு, ஜெர்மன் மற்றும் கொரியன் மொழிகளில் மொழி பெயர்க்கப்-பட்டுள்ளன. இவர் ஒரு சிறந்த பேச்சாளரும், பாடகரும் கூட.*

*இந்நூல் அவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "Hinduism through questions & answers" என்னும் நூலின் தமிழாக்கம் ஆகும். இதைச் செய்தவர் எமது மடத்தைச் சேர்ந்த சுவாமி அஜராத்மானந்தர் அவர்கள்.*

*இந்நூலை இந்து மக்கள், குறிப்பாக இளைஞர்கள் படித்துப் பயன்பெறுவார்களாக!*

குருபூர்ணிமா — பதிப்பாளர்

13.07.2003

# நூல் அறிமுகம்

இந்துக்களும், இந்து சமயமும், பல திசைகளிலிருந்தும், குறிப்பாக ஒரு நூலையும், ஒரு தீர்க்கதரிசியையும், ஒரு கோட்பாட்டையும் பிரமாணமாகக் கொண்டவர்களிடமிருந்து பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளன. நினைவிற்கு அப்பாற்பட்ட காலப் பகுதியிலிருந்து இந்து அபிமானிகள் இந்தத் தாக்குதல்களைத் தாங்கி வந்துள்ளனர். ஆனால் உண்மையில் இந்து சமயமும், அதன் விழுமிய அமைப்பு முறை மற்றும் பாரம்பரியமும், அவற்றின் பல்வேறுபட்ட வெளிப்பாடுகளும் இன்றும் உயிர்த் துடிப்புள்ள சக்திகளாக விளங்குகின்றன. இந்து மக்களின் பழமையான பாரம்பரிய வாழ்க்கை–க்கு உள்ள உறுதியும், உயிர்சக்தியும், ஒரு சமய நூலிலிருந்தோ அல்லது ஒரு தீர்க்கதரிசியிடமிருந்தோ வருவதல்ல. அது பல சமய நூல்களிலிருந்தும், பல ஞானிகளிடமிருந்தும் வருகின்றது. இந்து சமயம் தனது தத்துவசாரம், சமய அனுஷ்டானங்களின் தன்மை, மற்றும் கலை இலக்கிய அமைப்புக்களை சிறிதும் மாற்றாது, ஆனால் அதே சமயம் பல புதிய சிந்தனைகளை உள்வாங்கும் திறமையைக் கொண்டுள்ளதை வெளிக்காட்டி நிற்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, வாழ்க்கையில் பன்முகத் தன்மையை அனுமதிக்கக்கூடிய, ஊக்கு–விக்கவும் கூடிய மனோபாவத்தை இந்து சமயம் என்றும் ஆதரித்து வந்துள்ளது. வேறுபடும் கலாசாரங்களிடையே அது என்றும் ஒற்றுமை–யைக் கண்டு வந்துள்ளது.

மனிதகுல பாரம்பரியத்திற்கு இந்தியா வழங்கியுள்ள பெருங்–கொடையே இந்து சமயமாகும். நதிகளும், மலைகளும், வனங்களும், செழிப்பான சமவெளிகளும் கொண்ட இயற்கை வளம் நிறைந்த இந்திய உபகண்டத்தில் இச் சமயம் தோன்றி வளர்ந்தது. இந்த மண்ணில் பலஇனங்கள் போராடி, இறுதியில் இரண்டறக் கலந்துள்ளன, பல கருத்துக்கள் ஒன்றோடொன்று மோதி இறுதியில் இணைந்துள்ளன, பல அரசர்களும், சாம்ராச்சியங்களும், உயர்ந்த அதிகார மையங்களாக மலர்ந்து, இறுதியில் பேரழகும், புனிதமும் கொண்ட நினைவுச் சின்னங்களை விட்டு மறைந்துள்ளன. நவீன விஞ்ஞானக் கருவிகள் இன்றியே, மனது மற்றும் ஆன்மாவின் துணிச்சலினால், வாழ்வு மற்றும் சாவின் மர்மங்களைப் பலர் இங்கு ஆராய்ந்துள்ளனர். இவையனைத்தையும் வாழ்க்கைக்கு அர்த்தத்தை கொடுக்கக் கூடி–யதும், வாழ்க்கையின் எண்ணற்ற செயற்பாடுகளை நெறிப்படுத்தக் கூடியதுமான ஒரு மையக் குறிக்கோளைத் தேடும் நோக்குடனேயே அவர்கள் செய்தனர். இந்து சமயத்தின் கதை என்பது வாழ்க்கையின் மர்மத்தால் கவரப்பட்டவர்களதும், அறிவுக்கெட்டா உண்மையை ஆராய்வதில் சாகசம் செய்தவர்களதும் கதையாகும்.

சமத்துவம், சுதந்திரம் மற்றும் விஞ்ஞானத்தின் யுகம் இது. எல்லா மதங்களும் இன்று வரலாற்றின் ஒரு இக்கட்டான திருப்பு முனையில் நிற்கின்றன. இந்து சமயம் இதற்கு விதி விலக்கல்ல. இன்றுள்ள கொந்தளிப்பான சூழலில் தங்கள் பாரம்பரிய விழுமியங்கள் எங்ஙனம் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதை இந்துக்கள் அறிவார்கள். இந்துக்களை அடையாளப்படுத்தும் கருத்துக்களுக்கும், நிறுவனங்களுக்கும், தத்துவ, விஞ்ஞான, வரலாற்று ரீதியான விளக்கங்களைப் பலர் கேட்கிறார்கள். சிலரால் இதற்குப் பதில் கூற முடிவதில்லை. பதில் கூற முயல்பவர்களது விடைகளோ, சில சமயம் திருப்தி அளிக்கக்கூடியவையாக இல்லாதும், தப்பான அபிப்பிராயம் கொண்டவையாகவும் அமைந்து விடுகின்றன. இந்து சமயம் ஐயாயிரம் ஆண்டு சரித்திரத்தை உடையது. பல வரலாற்று விபரங்கள் ஆவணப்படுத்தப்படாமல் போய்விட்டன. எனவே வினவப்படும் அனைத்து வினாக்களுக்கும் திருப்திகரமானதும், தீர்க்கமானதுமான பதிலை வழங்குவது உண்மையாகவே ஒரு சிரமமான காரியமாகும். இத்தகைய சோதனையை அனைத்து சமயங்களும், அவற்றின் சமுதாய அமைப்பு முறைகளும் கூட ஓரளவு எதிர்நோக்குகின்றன.

இத்தகைய பின்னணியில், இச்சிறு நூலானது மாணவர்களாலும், விமர்சகர்களாலும் வினவப்படும் குறிப்பிட்ட ஒருசில வினாக்களுக்கா–வது, சுருக்கமாகவும், பணிவோடும் விடைகூறும் ஒரு முயற்சி–யேயாகும். இந்து சமயத்தோடு தொடர்புடைய அனைத்தையும் பாதுகாக்கும் நோக்கத்தோடு இந்த விடைகள் இங்கு அமையவில்லை. மாறாக, நன்கு பரிச்சயமான கருத்துக்கள் மற்றும் சமயக் கட்–டமைப்புக்களின் தோற்றத்திற்கான விளக்கத்தை மட்டும் இவை அளிக்கின்றன. கடந்த காலத்தில் பல விடயங்கள் மாறிவிட்டன. இன்னும் பல விடயங்கள் மாறவும் உள்ளன. காரணம், விஞ்ஞானமும்,

தொழில்நுட்பமும் தூரத்தைத் குறைத்து, ஒன்றுக்கொன்று வேறுபட்டும், விலகியும் நிற்கும் உலகின் இனங்கள் மற்றும் கலாசாரங்களை ஒன்றையொன்று நெருங்கிவரச் செய்துவிட்டன. இந்து சமயம் நீடித்திருக்கவும், மனித சமுதாயத்திற்கு உத்வேகம் ஊட்டவும், எல்லாவற்றிக்கும் மேலாக, மாறும் உலகில் புதிய வேர்களை ஊன்றவும் வேண்டுமெனில், இச் சமயம் எந்த நோக்கத்தை நிறைவு செய்ய அமைந்துள்ளது என்பதையாவது நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இச்சிறு நூலானது இந்து சமயம் பற்றிய சில தப்பான அபிப்பிராயங்களை நீக்கும் என்பதும், இச் சமயம் வழங்கியுள்ள விழுமியங்களில் குறிப்பாக இந்துக்கள் தமது நம்பிக்கையை புதுப்பித்துக்கொள்ள உதவும் என்பதும் எனது பெரும் நம்பிக்கையாகும். இந்நூலை மேலும் திருத்தமுறச் செய்வதற்கான ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன என நான் கூறத் தேவையில்லை. இந்த நூலாக்கத்திற்கு அரிய ஆலோசனைகள் வழங்கிய அனைவர்க்கும் நான் நன்றியறிதலுடையேன்.

04.03.1984 *சுவாமி ஹர்ஷானந்தர்*

*மைசூர், இந்தியா*

---

## 1. இந்து சமயம் என்பது எது?

புராதன பாரசீகர்கள் தங்கள் மொழியிலுள்ள ‘‘ஸ’’ என்ற எழுத்தை ‘‘ஹ’’ என்றே உச்சரித்தார்கள். அதனால் அவர்கள் சிந்து நதி பாயும் பாரத நாட்டை ஹிந்துஸ்தான் என்றும், அங்கு வாழ்ந்த மக்கள் பின்பற்றிய சமயத்தை ஹிந்து சமயம் என்றும் அழைத்தனர். இக் கோணத்தில் இருந்து நோக்கும் போது, இந்தியாவில் தோன்றிய சமணம், பௌத்தம், சீக்கியம் போன்ற அனைத்து சமயங்களும் இந்து சமயத்தின் பன்முகங்களே.

வேதங்களை அடிப்படையாகக் கொண்ட சமயமே இந்து சமயம். இது சனாதன தர்மம் என்றும் அழைக்கப்-படுகிறது. சனாதன தர்மம் என்பது ‘‘மிகப் பழமையானது, மாறாத விழுமியங்களைக் கொண்டது’’ எனப் பொருள்படும். ஆராய்ந்து பார்ப்பின் தர்மம் என்ற வார்த்தை இறுதியில் கடவுளையே குறிப்பதை அறியலாம். இறையனுபவத்துக்கு இட்டுச்செல்லும் எந்தவொரு சாதனை மார்க்கத்தையும்கூட தர்மம் என்று அழைக்கலாம்.

தொன்மையான காலத்திலிருந்து இற்றைவரை, இந்து சமயத்தில் கூறப்பட்டுள்ள ஆன்மீக மார்க்கங்கள் எல்லாம் இறையுணர்வுக்கு வழிகாட்டியிருக்கின்றன. எதிர்-காலத்திலும் அவை அத்தகைய தெய்வீக அனுபவங்களை அளிக்கும் என்பது உறுதி. எனவே இந்து சமயத்திற்கு ‘‘சனாதன தர்மம்’’ என்னும் பெயரானது மிகப்பொருத்தமான ஒன்றாகும்.

## 2. இந்து சமயம், எப்போது, எவரால் தொடங்கப்பட்டது?

இந்து சமயமானது ஏனைய மதங்களைப் போல ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியிலோ அல்லது ஒரு குறிப்பட்ட தீர்க்கதரிசியாலோ தோற்றுவிக்கப்பட்டதல்ல. வாழையடி வாழையெனத் தோன்றிய ரிஷிகளினதும், ஞானிகளினதும் ஆன்மீக அனுபவங்களை அடிப்படை-யாகக் கொண்ட தனிச் சிறப்பு மிக்க சமயமே இந்து சமயம். இந்த ஆன்மீகப் பரம்பரையைச் சேர்ந்த ஒவ்வொரு ரிஷியுமே ஒரு தீர்க்கதரிசியென அழைக்கப்படக் கூடிய தகுதி வாய்ந்தவராவார். திரும்பத் திரும்ப மெய்ப்பிக்கக்-கூடியதும், உறுதியானதுமான ஆன்மீக அனுபவங்களை அடித்தளமாகக் கொண்ட இந்து சமயப் பாரம்பரியமானது கங்கையின் பிரவாகத்தைப்போல் பல்லாயிரம் ஆண்டு-களாகப்

பாய்ந்துகொண்டிருக்கிறது. அதனாலேயே இச் சமயம் 'சனாதன தர்மம்' என அழைக்கப்படுகிறது.

## 3. இந்து சமயத்தின் மூல நூல்கள் யாவை? அவை கூறும் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூற முடியுமா?

இந்து சமயத்தின் மூல நூல்கள் வேதங்களாகும். வேதம் என்னும் சொல்லின் பொருள் அறிவு, ஞானம் என்பதாகும். சுருதி (இறைவனால் அருளப்பட்டது), ஆகமம் (பரம்பரை பரம்பரையாக வந்தது), நிகமம் (வாழ்வின் அடிப்-படைப் பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான தெளிவான தீர்வைத் தருவது) என்னும் பெயர்களாலும் இது அழைக்கப்படுகிறது. கடவுளின் அருளால் ரிஷிகளின் உள் உணர்வில் வெளிப்-படுத்தப்பட்டமையால் வேதங்கள் ''அபௌருஷேயம்'' என அழைக்கப்படுகின்றன. அபௌருஷேயம் என்றால் மானிடரால் உருவாக்கப்படாதது என்று பொருளாகும்.

வேதங்கள் நான்கு வகைப்படும். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்பனவாகும். இந் நான்கினுள் இருக்கு வேதமே மிகப்பழமையானது என ஏற்றுக்கொள்ளப்-பட்டுள்ளது. திரு. பாலகங்காதர திலகரும் இன்னும் சில ஆய்வாளர்களும் இருக்கு வேதத்தில் காணப்படும் வானியல் குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு இவ் வேதமானது இற்றைக்கு எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொகுக்கப்பட்டது எனக் கணித்துள்ளனர். இருக்கு வேதமானது தோத்திரப் பாடல்களின் தொகுப்பாகும். யசூர் வேதம் யாகங்களையும், கிரியைகளையும் பற்றிக் கூறுகின்றது. சாம வேதம் இருக்கு வேதத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இசைப் பாடல்களின் தொகுப்பாகும். இது சில வேள்விகளின் போது பொருத்தமான கட்டத்தில் இசைக்கப்படும். நமது சாஸ்த்திரீய சங்கீதத்தின் ஊற்று சாம வேதமே. அதர்வ வேதம் ஒழுக்கவியல் கோட்பாடு-களின் திரட்டாக அமைந்தள்ளது. இவ்வேதம் ஆயுர்வேதம் போன்ற சில விஞ்ஞானத் துறை சார்ந்த கருத்துக்-களையும் உள்ளடக்கி விளங்குகிறது. ஆயுர்வேதம் ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும் பற்றிய நூலாகும்.

ஒவ்வொரு வேதமும் நான்கு பகுதிகளாக பகுக்கப்-பட்டுள்ளது. அவை மந்திரம் அல்லது சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிஷதம் என்பனவாகும். சம்ஹிதை என்பது, இந்திரன், வருணன், விஷ்ணு போன்ற வேதகாலத் தெய்வங்களை நோக்கிச் செய்யப்பட்ட பிரார்த்தனைப் பாடல்களாகும். பிராமணம் என்பது (இச் சொல்லை பிராமணர் என்னும் சாதிப் பெயரோடு இணைத்து குழப்பமடையக் கூடாது) வேதகால வேள்விகளையும் அவற்றைச் செய்யும் முறைகளையும் விளக்கிக் கூறு-கின்றது. ஆரண்யகம், யாகக் கிரியைகளை அடிப்படை-யாகக் கொண்ட தியானம் செய்யும் முறைகளை விளக்கிக் கூறுகிறது. உபநிடதங்கள், தத்துவ ஞானப் பிரிவாகும். மாறும் உலகில் மாறாத உண்மை பற்றியும், மனிதனின் உண்மையான இயல்பு பற்றியும், வாழ்வின் குறிக்கோள் மற்றும் அதை அடையும் வழிகள் பற்றியும் உபநிடதங்கள் விளக்கிக் கூறுகின்றன.

## 4. வேதத்தைத் தவிரப் புனிதமானவைகளாகவும், அதிகார – பூர்வமானதாகவும் மதிக்கப்படும் வேறு நூல்களும் உண்டா?

இந்து சமயத்தில் பெருந்தொகையான நூல்கள் புனித நூல்களாகக் கொள்ளப்படுகின்றன. இருப்பினும் எல்லாத் தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்டவையும், வைதீக மரபு தழுவியதுமான நூல்கள் இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, ஆகமங்கள், புராணங்கள், தரிசனங்கள், மனு போன்ற முனிவர்களின் ஸ்மிருதிகள் என்பனவாம்.

இராமாயணம் இராமபிரானது வாழ்க்கையையும், அவரது செயல்களைப் பற்றியும் கூறுகிறது. மகாபாரதம் பாண்டவ கௌரவ மன்னர்களின் சரித்திரத்தைக் கூறு-வதோடு, வாழ்க்கைப் பிரச்சினையை எவ்வாறு எதிர்நோக்க வேண்டும் என்று வழிகாட்டிய ஸ்ரீகிருஷ்ண பகவானின் கதையையும் கூறுகிறது.

மகாபாரதத்தின் ஒரு பகுதியாயுள்ளதும் கீதை என எல்லோராலும் போற்றப்படுவதுமான நூல் பகவத்கீதை ஆகும். உபநிடதங்களை பசுவாகக் கொண்டால் கீதை அப்பசுவின் பாலாகும். இது பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்கும் அர்ஜுனனுக்கும் இடையே நடந்த உரையாடலாகும். குரு-சேஷத்திரம் என்னும் போர்க்களத்திலேயே இவ்வுரையாடல் இடம் பெற்றது. ஒருவனது கடமை எவ்வளவு கடினமான-தாக இருந்தாலும், மகிழ்ச்சியற்றதாக அமைந்தாலும், அதனை ஊக்கத்தோடும், தன்னலமற்ற மனநிலையோடும் ஆற்ற வேண்டும் என்பதே கீதையின் மையக்கருத்தாகும். கடவுளை மகிழ்விக்கவும், உலகுக்கு சேவை செய்யவும், சமுதாயத்துக்கான நமது கடனைத் திருப்பிச் செலுத்தவும் நாம் நமது சுயதர்மம் எனப்படும் கடமையை செவ்வனே செய்யவேண்டும். ஸ்வதர்மம் என்பது ஒருவனது இயல்புக்-கேற்பவும், ஆற்றலுக்கேற்பவும் ஆற்றும் கடமையாகும். சுயதர்மத்தை ஆற்றுவதிலேயே நமது நலன் தங்கியிருக்-கின்றது. நமக்குப் பொருத்தமில்லாத, பிறருடைய சுய-தர்மத்தை நாம் தெரிவு செய்தால் அது நமக்குத் தீமையை விளைவிக்கும்.

ஸ்மிருதி எனப்படும் அறநெறி நூல்கள், மனு, ஞாக்ஞவல்யர், பராசரர் போன்ற முனிவர்களால் தொகுக்-கப்பட்டவையாகும். நிலையான வேத உண்மைகளை மையமாகக் கொண்ட ஸ்மிருதிகள், கால வெள்ளத்தால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கிடையில் இந்து சமுதாயத்தை வழி நடத்தியிருக்கின்றன. ஒவ்வொரு இந்துவும், தனிப்பட்ட முறையிலும், சமுதாய நிலையிலும் எவ்வாறு ஒழுக வேண்டும் என்னும் ஒழுக்க விதிகளை இவை வரையறை செய்துள்ளன.

ஆகமங்கள் பெரும்பாலும் பல்வேறு தெய்வ வழிபாட்டு முறைகளையும், கோயிற்கிரியைகளையும், வழிபாட்டுத் தலங்களையும், ஆன்மிகப் பயிற்சிகளையும் விபரித்துக் கூறுகின்றன.

புராணங்கள் வரலாற்றுச் செய்திகளை உடையன-வாயிருந்தபோதிலும் சிறப்பாக அறநெறிகளையும், ஆன்மிக உண்மைகளையும், கதைகள், உருவகங்கள், உவமைகள், குறியீடுகள் ஆகியவற்றின் மூலம் புலப்படுத்துகின்றன. அவையே பொது மக்களின் சமயக் கல்விக்கும், பண்-பாட்டுக் கல்விக்கும் ஊற்றாக விளங்குகின்றன. விஷ்ணு புராணமும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் கதைகளைக் கூறும் பாகவத புராணமும் எல்லோரும் நன்கு அறிந்த புராணங்-களாகும்.

தரிசனங்கள் எண்ணிக்கையில் ஆறு வகைப்படும். கடவுள், ஆன்மா, உலகின் தோற்றம் போன்ற அடிப்படை-யான வினாக்களுக்கு விளக்கம் தரும் சீராக வகுக்கப்பட்ட தத்துவச் சிந்தனைகளே தரிசனங்கள் எனப்படும். இவை-களில் பதஞ்சலி யோகதரிசனமும், பாதராயண வியாசரின் வேதாந்த தரிசனமும் இன்றும் பிரசித்தி பெற்று விளங்கு-கின்றன.

## 5. கடவுள் நம்பிக்கை உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கும் பொதுவானது. இந்து மதம் கூறும் கடவுட் கோட்பாடு யாது?

கடவுள் ஒருவரே. அவருக்கிணையாக ஏதும் இல்லை. அவருடைய இயல்பு சத்-சித்-ஆனந்தம் ஆகும். நிலையான இருப்பு, அறிவு, ஆனந்தம் என்பது அதன் பொருள். அவரே இப்பிரபஞ்சத்தை படைப்பவர். அவர் தன் ஆற்றலால் தன்னிலிருந்து இவ்வுலகனைத்தையும் படைக்-கிறார், நிலைப்படுத்துகிறார், அதன்

தேவை முடிவுற்றதும் தம்முள் அவைகளை ஒடுக்கிக் கொள்கிறார். இச்செயல் சக்கரம் போல் முடிவற்றுத் தொடர்ந்து கொண்டேயிருக்-கிறது.

உலகாளும் சக்கரவர்த்தி, மக்களின் நன்மை தீமைக்கேற்ப வெகுமதியும் தண்டனையும் வழங்குவது போல் இறைவனும் இப்பிரபஞ்சத்தை ஆளுகிறார். அவர் எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், எங்கும் நிறைந்தவர், அனைத்துள்ளும் உறைந்து அவைகளை இயக்குபவர். அவர் சத்தியம், ஞானம், சுந்தரம் ஆகியவைகளின் உறைவிடம். கற்பனைக்கும் எட்டாத எல்லா நற்குணங்-களின் பரிபூரண வடிவம் அவர். கட்டுண்டு துன்பப்படும் ஜீவர்களிடத்து அவர் கொண்டுள்ள பெரும் கருணையே அவரது பிரதானமான பேரருட் குணமாகும். உண்மையில் இறைவனின் இவ்வுலகப் படைப்பின் நோக்கமே தாழ்வுற்ற ஜீவர்களின் உயர்வுக்காகவேயாகும். ஜீவர்கள் படிப்படியாக ஆன்மிக விழிப்பும் உயர்வும் பெற்று இறுதியில் பரிபூரணத் தன்மையை அடைவதுதான் படைப்பின் நோக்கமாகும். அவர் பக்தியையும் நம்பிக்கையையுமே பெரிதும் நேசிக்-கிறார். அவரிடம் நாம் முழுமையாகச் சரணடைவதன் மூலம் அவரை மகிழ்விக்கலாம். அவர் மகிழ்வுற்றால் நம் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட்டதாகின்றது.

அவர் உருவம் உடையவர், உருவம் அற்றவர், உருவம் அருவம் இரண்டையும் கடந்தவரும் ஆவார். அது-மாத்திரமல்ல் எம்மை மிருக இயல்பிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்துவதற்காக அவதாரமும் எடுக்க வல்லவர்.

## 6. இந்துக்கள் கடவுள் ஒருவரே என்ற கொள்கை உடைய–வராயின் அவர்கள் ஏன் சிவன், விஷ்ணு, தேவி, விநாயகர் போன்ற பல கடவுளர்களை வணங்க வேண்டும்? இவ்–வழிபாடு பல கடவுளர்களையும், சிறு தெய்வங்களையும் ஏற்றுக்கொள்வது போன்றதல்லவா? இக்கோட்பாட்டை நாம் ஏற்றுக்கொண்டால் நமது புராணக் கதைகளுக்கேற்ப கடவுளர் ஒருவரோடொருவர் போட்டியிடுவதையும், போரிடுவதையும் ஏற்றுக் கொள்கிறோம் அல்லவா?

இந்து சமயம் பல தெய்வங்களையும், தேவதை-களையும் ஏற்றுக்கொண்டுள்ள போதும் மூலப் பரம்பொருள் ஆகிய ஒருவனையே முழுமுதற் கடவுளாக ஏற்றுக்-கொண்டுள்ளது. இத்தெய்வங்களில் இந்திரன் முதலியோர் எங்களைப் போன்ற சாதாரணமான ஆன்மாக்களே ஆவர். கடந்த கல்பத்தில் அவர்கள் செய்த மாபெரும் புண்ணிய பலனால் இவ்வித உயர் பதவிகளைப் பெற்றனர். அரச தலைமைத்துவத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்தும் அரச அதிகாரிகளைப் போல, இத்தேவர்களும் மேலான பரம்பொருளின் ஆளுகைக்கு உட்பட்டவர்களே ஆவர். அவர்களின் புண்ணிய பலன் முடிவுற்றவுடன் அவர்-கள் தங்கள் பதவிகளை இழந்து ஆன்ம விடுதலைக்காக முயல வேண்டியவராவர்.

அடுத்து பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோரை எடுத்துக்கொள்வோம். அவர்கள் மூவரும் தனித்துவமுடைய கடவுளர் அல்ல. மூலப் பரம்பொருளின் மூன்று வித அம்சங்களே அவர்கள். பரம்பொருளின் இவ்வம்சங்கள் முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்-தொழில்களைச் செய்கின்றன. ஒருவரே தந்தையாக வீட்டிலும், அதிகாரியாக அலுவலகத்திலும், வாடிக்கை-யாளராக கடையிலும் செயற்படுவது போல, ஒரே பரம்-பொருள் வெவ்வேறு செயற்பாட்டின் போது வெவ்வேறு பெயர்களைப் பெறுகிறது. மும்மூர்த்திகளைப் போன்று ஏனைய தெய்வங்களும் வெவ்வேறு நோக்கத்திற்காக தோன்றிய ஒரே பரம்பொருளின் வெவ்வேறு அம்சங்களாகும்.

தீயின் ஆற்றலைத் தீயிலிருந்து பிரிக்க முடியாது-போல இந்தத் தெய்வங்களின் ஆற்றல்களையும் அவற்றி-னின்றும் பிரிக்க முடியாது. இத்தெய்வீக ஆற்றல்களே அவ்வவ் தெய்வங்களின் சக்தியாக கூறப்பட்டுள்ளன. அவையே சரஸ்வதி, இலக்குமி, பார்வதி ஆகும்.

இதிலிருந்து இத்தெய்வங்களெல்லாம் கற்பனைப் படைப்புக்கள் என்பது கருத்தன்று. சக்கரையால் செய்யப்-பட்ட பொம்மை, சக்கரையே என்பது போல இந்தத் தெய்வங்கள் எல்லாம் பரமாத்மா எனப்படும் மூலப்பரம்-பொருளின் வெவ்வேறு அம்சங்களும் நிலைகளுமாகும். எம் போன்ற சாதாரண மக்களால் பரம்பொருளின் முழுத்-தத்துவத்தையும் புரிந்து கொண்டு அவரை அவராக வழி-படுவது சிரமம். பழங்கால முனிவர்கள் தங்கள் தவத்தின் பலத்தினால், பரம்பொருளின் வெவ்வேறு திருவுருவங்-களையும், திருநாமங்களையும் இறைவனிடமிருந்து பெற்று நமக்கு வழங்கியுள்ளார்கள். ஆகவே இத்தெய்வங்களைத் தியானித்துப் பெறுகின்ற ஆன்மிக அனுபவமும் இறை அனுபவமும் ஒன்றேயாகும்.

இறுதியாக, சில புராணங்களில் காணப்படும் முரண்-பாடுகள் பற்றி சில வார்த்தைகள் கூறவேண்டும். இவை பல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்றன. அதனால் ஆரம்பத்தில் காணப்பட்ட மூலத்திலிருந்து பின்னய இடைச்-செருகல்களை பிரித்துக் காண்பது கடினமாகும். சமயப் பிரிவுகள், தங்கள் கருத்துக்களின் மேலாண்மையை நிலை-நிறுத்த, ஒன்றொடொன்று போட்டிப்போட்டு பிணக்குகள் ஏற்பட்ட காலத்தில் புராணங்களில் இவ் இடைச்செருகல்கள் ஏற்பட்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. எனவே இத்தகைய முரண்பாடுகளை ஒதுக்கி விடுவதே தகுந்தது.

## 7. கற்களாலும், களிமண்ணாலும், உலோகங்களாலும் மனிதர் உண்டாக்கிய உருவங்களை வழிபடுவது மடமையல்லவா? இது அறியாமைக்கும் மூடக் கொள்கைக்கும் சான்றல்லவா?

இந்த மறுப்பானது, உருவ வழிபாட்டின் மிக உயர்ந்த தத்துவக் கோட்பாட்டைப் பற்றிய தெளிவு இன்மையால் அடிக்கடி எழுப்பப்படுவதாகும். ஒருவரது உருவப்படத்தைப் பார்க்கும் போது அப்படத்துக்குரியவரின் ஞாபகம் வருவது போல் சிலைகளைப் பார்க்கும் போது பக்தன் அவற்றுக்குரிய தெய்வ உணர்வுகளைப் பெறு-கிறான். இந்துக்கள் மட்டுமல்ல, சிலுவையை வழிபடும் கிறிஸ்தவரும், காபா எனப்படும் கருங்கல்லைப் போற்றும் இஸ்லாமியரும், தேசிய கொடிக்கு வணக்கம் செலுத்தும் தேசபக்தரும்கூட உருவ வழிபாட்டினரேயாவர்.

மூடக்கொள்கைகளைப் பற்றிப் பேசுவதை விட பேசாமலிருப்பதே நல்லது. அதிர்ஷ்டமற்ற மூதாட்டிகளை சூனியக்காரிகள் என்று வர்ணித்து அவர்களை எரித்த ஐரோப்பிய சரித்திரம் அனைவரும் அறிந்த விடயமாகும். இன்றும் 13வது இலக்கம் துரதிஷ்ட இலக்கமாக கருதப்-படுகிறது. தற்செயலாக ஒரு சட்டையின் உட்புறத்தை வெளிப்புறமாக மாற்றி அணிந்துவிட்டால் எடுத்த காரியத்-தில் தோல்வி ஏற்படும் என நம்பப்படுகின்றது. உண்மையில் இந்துக்களின் பல பழக்கவழக்கங்கள் மூடக்கொள்கைகள் என கேலி செய்யப்பட்டாலும் அவை ஆழமான தத்துவங்-களையும், மனோதத்துவங்களையும் தம் பின்னனியில் கொண்டவை. மூடப் பழக்கவழக்கங்கள் இருப்பதாக எடுத்துக் கொண்டாலும் அவைகள் எவ்விதத் தீமையும் அற்றவையாகும். நவீன விஞ்ஞானம் மனிதனுக்கு மன அமைதியைக் கொடுக்க முழுஅளவில் தவறிய போதிலும், நவீன மனிதன் அதுவே முழுமையானது என நினைப்பது மிகப் பெரிய மூடக்கொள்கையாகும்.

8. பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் வழிபடும் கோயில்களில் இவ்வுருவங்களை அமைப்பது வழக்கமாகும். இங்ஙனம் அமைப்பதன் நோக்கம் என்ன? மேலும் ஆலயங்களின் முக்கியத்துவம் என்ன?

கடவுள் எங்கும் இருக்கிறார். அவரே உலகைப் படைத்து அதனை இயக்குகிறார். அவருடைய திருவருள் நமக்கு ஆனந்தத்தையும் சாந்தியையும் தருகிறது. அவரின் கோபம் நமக்குத் துன்பத்தைத் தருகிறது. உலகெங்கிலும் உள்ள மனித குலம் இக்கருத்தை ஏதோ ஒரு வகையில் நம்புகிறது.

அத்தகைய இறைவன் ஒருவன் உள்ளான் என ஒப்புக்கொண்டால் அவனை இலகுவாக அணுகுவதற்கும் அவனை மகிழ்வித்து அவன் அருள் பெறுவதற்கும் ஒரு வழியிருக்கவேண்டும். அதுவே ஆலயங்களாகும். இறைவன் நமக்கு அருள்புரிய உலகுக்கு வரும் போது அவன் உறையும் இடமாக திருக்கோயில்கள் கட்டப்படுகின்றன.

அரசன் தன்னாட்சிக்குட்பட்ட பிரதேசத்திற்கு விஜயம் செய்யும் போது பாசறை அமைப்பதற்கு இது ஒப்பாகும்.

திருக்கோயிலின் முக்கிய பகுதிகளாவன, மூல-விக்கிரகம் பிரதிட்டை பண்ணப்பட்டிருக்கும் கர்ப்பக்கிரகம், இதனை அடுத்து அமைக்கப்பட்டுள்ள சுகனாசி, அன்தராலா எனப்படும் வீதிகள், சமய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபம், கொடிமரம், பலிபீடம் என்பன.

பெரிய கோயில்களில் மூலவரோடு தொடர்புடைய சிறு தெய்வங்களுக்கும் சிறிய சன்னிதிகள் அமைக்கப்-பட்டிருக்கும். கோயில்களைச் சுற்றிப் பெரிய மதில்கள் எழுப்பபட்டிருக்கும். யாகங்கள் செய்வதற்கு ஏற்ற இடங்களும், நைவேத்தியம் தயாரிப்பதற்கான மடப்பள்ளி-களும் கட்டப்பட்டிருக்கும். கோயில் தேர் முட்டியும், கிணறும், குளமும், நந்தவனமும் கோயிலோடு அமைக்கப்-பட்டிருக்கும்.

கோயில் அமைப்பு, பெரும் தத்துவத்தை விளக்கும் ஒரு சின்னமாகும். இறைவனின் உலகளாவிய உண்மை-யைக் குறிப்பதாகும். கர்ப்பகிரகம் இறைவனின் தலைப் பகுதியாகும். கோபுரம் இறைவனின் திருவடியாகும். சுகானாசி இறைவனின் மூக்காகும். அந்தராலா அவரது கழுத்தாகும். கோயிற் பிராகாரம் (வீதி) அவரது கைகளாகும். கோயிலமைப்பு, இறைவன் வாழ்கின்ற மனித உடலின் அமைப்பை ஒத்ததாகும். கோயில், முழுபடைப்பையும் உணர்த்தும் ஒரு அமைப்பாகவும் கொள்ளத்தக்கதாகும்.

சாஸ்திர விதிப்படி, புனிதப்படுத்தப்பட்ட கோயில்களி-லுள்ள தெய்வ உருவங்கள் உயிருள்ள தெய்வங்களாகவே மதிக்கப்படுகின்றன. எனவே கிரியைகளோடு கூடிய ஆராதனை இன்றியமையாததாகின்றது. கோயில் அமைப்-புக்கும் பொருளாதார வசதிக்கும் ஏற்ப தினங்தோறும் ஒன்று முதல் ஒன்பது காலம் வரை பூஜைகள் நடை-பெறுகின்றன. விசேட நாட்களில் விசேட திருவிழாக்கள் நடைபெறுகின்றன. பிரம்மோற்சவமே மிகப்பெரிய திருவிழா-வாகும். தேர்த்திருவிழாவும் இக்காலத்திலேயே நடைபெறு-கிறது. திருக்கோயிலின் நடமாடும் சின்னமாகவே திரு உலாவரும் தேர் அமைந்துள்ளது.

கோயில் வழிபாட்டுக்குச் செல்வோர் உடற் சுத்தம் உடையவராகவும், இறைநம்பிக்கையும் ஈடுபாடும் உடை-யவராகவும் இருக்க வேண்டும். அமைதியாக மூலவரைச் சென்று வணங்கி காணிக்கை செலுத்தி விட்டு வெளியே வந்து வீதியில் வலம் வந்து வணங்க வேண்டும். கொடிமரத்துக்கு வெளியே வந்து வணக்கம் செலுத்தி விட்டு கோயிலில் அமைந்துள்ள பரிவார தெய்வங்களை வணங்க வேண்டும். இறுதியாக கோயிலின் வடகிழக்குப் பக்கத்தில் ஒதுக்குப் புறமாயுள்ள ஓரிடத்தில் அமர்ந்திருந்து தியானம் செய்ய வேண்டும்.

திருக்கோயில்களின் தூய்மை-யையும் தெய்வீகத்தையும் காப்பது வழிபடச் செல்வோரின் தலையாய கடமையாகும்.

## 9. வீடுகளிலோ கோயில்களிலோ செய்யப்படும் வழிபாட்டின் முக்கியத்துவம் என்ன? வழிபாட்டுக்கென குறிப்பிட்ட வழிமுறைகள் ஏதாவது உள்ளனவா?

நாம் நேசிக்கும் நண்பர்களையும், உறவினர்களையும் உபசரிப்பது போல பூஜை செய்தலும் வணங்குதலும் இறைவனுக்கேற்ற வழிபாட்டு முறைகளாகும். பல்வேறு படித்தரங்களைக் கொண்ட வழிபாட்டு முறைகளைப் பின்-வருமாறு வகைப்படுத்தலாம்: ஆவாஹானம் பண்ணுதல் (விக்கிரகத்தில் இறைவனை எழுந்தருளப் பண்ணுதல்) ஆசனம் அளித்தல் (இறைவன் வீற்றிருக்க ஆசனம் அளித்தல்) பாத்ய அர்க்கிய பூஜை புரிதல் (இறைவன் திருவடிகளையும் திருக்-கைகளையும் நீரால் கழுவுதல்) ஸ்நானம் அல்லது அபிஷேகம் செய்தல் (திருமுழுக்காட்டுதல்) வஸ்திரம் தரித்தல் (ஆடை உடுத்தல்) சந்தனம் அளித்தல், புஷ்பம் சமா்ப்பித்தல், தூபம் இடுதல், தீப ஆராதனை காட்டல், நைவேத்தியம் அளித்தல், இறுதியாக, விடைகொடுத்தல் என்பனவாகும்.

கோயில்களில் அபிஷேகமும் அலங்காரமும் மிக விமரிசையாகச் செய்யப்படுகின்றன. உண்மையான நம்பிக்-கையோடும் ஈடுபாட்டோடும் செய்யப்படும் வழிபாடு மனதுக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தருகின்றது. முறைப்படி புனிதப்படுத்தப்பட்ட தெய்வ மூர்த்தங்களில் இறைவன் மிக சூக்குமமாக எழுந்தருளியிருந்து பக்தனின் வழிபாட்டை ஏற்று அருள்கிறான் என்பது ஆகமங்களின் முடிவு என்பதை இங்கு கூறவேண்டும்.

## 10. இது தொடர்பாக மேலும் இரண்டு வினாக்கள் எழுகின்றன. நாம் ஏன் விழாக்கள் கொண்டாட வேண்டும்? எப்படிக் கொண்டாட வேண்டும்.?

எல்லா மதங்களிலும் விழாக்களும் திருநாட்களும் பொதுவான அம்சமாகும். பொதுமக்கள் பொதுவாக, தத்து-வத்தினுடாக ஞானத்தையும், புராணங்களினுடாக அறிவை-யும் பெற்றாலும், சமயத்தோடு தொடர்புடைய கிரியைகளை-யும், சடங்குகளையும் செய்யவில்லையென்றால் உள-மார்ந்த திருப்தியைப் பெறுவதில்லை. விழாக்களும் திரு-நாட்களும் இத்தயை திருப்தியைத் தருகின்றன. இவற்றைச் செய்வதன் மூலம் அவர்கள் அமைதியையும் மகிழ்ச்சியை-யும் அடைகிறார்கள். சமுதாய ரீதியில் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஏற்படுகின்றன. மேலும் சமயமும் கலா-சாரமும் பரவுதற்கு விழாக்கள் உதவுகின்றன. திருவிழா நாட்களில் மற்றைய நாட்களைவிட அதிகமான நேரம் வழிபாட்டுக்கும் சமய சாதனைகளுக்கும் ஒதுக்க வேண்டு-மென எதிர்பார்க்கப்படுகிறது. விழாக்காலங்களில் நாம் உண்ணும் விருந்து நாம் பெறப்போகும் ஆன்மிகப் பெரு-விருந்தின் வெளி அடையாளமாகும். ஆனால் விழாக்களை-யும் திருநாட்களையும் விருந்துண்ணும் நாட்களாகக் கருதி அதன் பின்னணியிலுள்ள ஆன்மீக உயர்வை நாம் மறப்-போமானால் சமயத்தை கேலி செய்தவராவோம். இங்ஙன-மாகவே Holy-day ஒரு Holiday நாளாக ஆக்கப்படுகிறது.

இத்தகைய திருவிழாக்கள், ஸ்ரீஇராமகிருஷ்ணர் போன்ற சமயப் பெரியோரின் பிறந்த நாளாகவோ கீதை ஜயந்தி போலச் சமய கலாசார வரலாற்றின் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகவோ அமையக்கூடும். மகர சங்கராந்தி போல இயற்கை அன்னைக்கு நன்றி செலுத்தும் நாளாகவும் அமையலாம். புராண இதிகாச அடிப்படை கொண்ட தீபாவளியாகலாம். ஒருவரது பிறந்த நாளும் மகிழ்ச்சிக்-குரிய நாளேயாகும். இத்தகைய நாட்களில் விரதமிருத்தல், புலனடக்கம் செய்தல், குலதெய்வ வழிபாடு செய்தல், பெரியோரைப் பேணல், அவரது ஆசிபெறல் முதலியவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். இந்நாட்களில் உறவினருட-னும் நண்பர்களோடும் உணவு உட்கொள்ளல், அவர்கள்

வீடுகளுக்குச் செல்லல், அன்பளிப்புக்களை பரிமாறிக் கொள்ளல் போன்ற வழக்கமாக நடைபெறும் செயல்களைத் தொடரலாம். ஆனால் இவை, தவம், புலனடக்கம் ஆகிய-வற்றிற்கான மாற்றுக் காரியங்களாக அமைந்து விடக் கூடாது.

வட இந்தியாவில் தசரா நாட்களில் இராம லீலாவும் துர்க்கா பூஜையும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்-படுகின்றன. அங்ஙனமே கணேச சதுர்த்தியும் தென்னிந்தியா-வில் கொண்டாடப்படுகிறது. ஹோலி எனும் திருநாள் நாடு முழுவதும் பொதுவாகக் கொண்டாடப்படுகிறது. இருப்பினும் இந்நாட்களில் இத்தகைய திருவிழாக்களில் சமய, ஆன்மீக நோக்கங்கள் குறைந்து, ஒழுங்கீனமான காரியங்களும், வன்முறைகளும் வளர்ந்திருப்பது வருந்தத்தக்கது. ஆனால் நமது சமுதாயம் இத்தகைய தவறுகளிலிருந்து விழித்-தெழுந்து, திருவிழாக்களின் தூய்மையையும் தெய்வீகப் பெருமையையும் பேண வேண்டிய காலம் வந்துவிட்டது.

## 11. கடவுள் மனிதனாக அவதரிக்கிறார் என்பது உண்மையா? இது எங்ஙனம் நிகழ்கிறது? அத்தகைய அவதாரங்களுக்கு ஏதும் எல்லையுண்டா?

இத்தகைய விடயங்களில் நமது சாஸ்திரங்களையே மேலாண்மையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். கீதையில் கிருஷ்ண பரமாத்மா, உலகில் எப்போது தர்மம் குன்றி அதர்மம் தலையெடுக்கிறதோ அப்போது தான் அவதாரம் எடுப்பதாகக் கூறியுள்ளார். அவர் அநீதியை அழித்து நீதியைக் காத்து சமுதாய சமநிலையைப் பேணுகிறார். இதுதான் அவதாரக் கொள்கையின் முடிந்த முடிவாகும். இறைவன், மனம் வாக்கைக் கடந்தவனாயினும் மனித உரு எடுக்க வல்லவனே. இந்நிலையில் இறைவனுக்கும் நமக்குமுள்ள வேறுபாட்டினைப் பின்வருமாறு காணலாம்.

நாம் நமது கர்மவினைக்கேற்ப பிறவி எடுத்து மாயையினால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றோம். அதனா-லேயே நாம் துன்பப்படுகிறோம். இறைவன் அவனது சங்கற்பத்திற்கேற்பப் பிறவி எடுக்கிறான். மாயையைத் தன்னகப்படுத்தியுள்ளான். அவனுக்கும் நமக்குமுள்ள வேறு-பாடானது, கைதியாக்கப்பட்டுள்ள திருடனைச் சுற்றியுள்ள காவல் துறையினருக்கும், ஜனாதிபதியைச்சுற்றி அவரது ஏவலுக்காக காத்திருக்கும் காவல் துறையினருக்குமுள்ள வேறுபாட்டுக்குச் சமமாகும்.

இத்தகைய அவாதரம் எந்த நேரத்திலும் எந்த நாட்டிலும் நிகழலாம். இதற்குரிய அடிப்படைக் காரணம், சமுதாயத்தில் அதர்மம் மிகுந்து தர்மம் குன்றியிருப்பதே-யாகும். எனவே இத்தனை அவதாரங்கள்தான் நிகழலாம், அவை இன்ன இடத்தில்தான் ஏற்பட வேண்டும் என்னும் விதிகள் இல்லை.

## 12. மனித இயல்பைப் பற்றியும் மனித வாழ்வின் நோக்கத்தைப் பற்றியும் இந்து சமயம் என்ன கூறுகிறது?

இவ்வினா சுருக்கமாகவும் எளிமையாகவும் காணப்-பட்டபோதிலும் இந்து தத்துவத்தில் மிகஆழமாக விளக்கப்-பட்டுள்ள விடயம் இதுவேயாகும். இந்து சமயத்தின் எல்லாப் பிரிவினராலும் மிக மேலான சாஸ்திரமாகக் கொள்ளப்படும் உபநிஷதங்களின் கூற்றின்படி மனிதனின் நிஜ சொருபம் ஆத்மா. இது தோற்றமும் முடிவுமற்றது. இது பிறத்தல், வளர்தல், அழிதல் அல்லது மரணமடைதல் அற்றது. மாற்றங்கள் யாவும் உடம்புக்கே. ஆத்மா சித்துத் தன்மையும் ஆனந்தமும் உடையது.

## 13. அப்படியானால் நாம் ஏன் வாழ்கையில் துன்புறுகிறோம்? இதற்கொரு முடிவில்லையா?

துன்பத்திற்குக் காரணம் மாயை, அஞ்ஞானம் அல்லது அவித்தை ஆகும். இந்த மாயையின் காரணத்-தினால் நாம் நமது உண்மை இயல்பாகிய ஆன்மாவை உணராமல், நம்மை உடலெனவும், புலன்களெனவும், மனம் எனவும் மயங்கி வருந்துகிறோம். நாம் மாயையின் பிடிக்குள் அகப்பட்டது ஏன், எப்போது என்பன தீர்க்க முடியாத ஒரு புதிராகும். மாயையின் விளைவுகளாகிய மனமும் அறிவும் இந்தப் புதிரை ஒருபொழுதும் தீர்க்க இயலாது. இருப்பினும் தக்க குருவின் வழிகாட்டலின் கீழ் நம்மை நாம் பண்படுத்துவோமானால் ஆத்ம ஞானத்தின் மூலம் மாயையிலிருந்து விடுபட்டு மோட்சத்தையடையலாம் என சாஸ்த்திரங்கள் உறுதியளிக்கின்றன.

## 14. வாழ்வின் குறிக்கோள் மோட்சம் அடைதல் மட்டும்தானா? இவ்வுலக வாழ்வோடு தொடர்புடைய ஏனைய குறிக்கோள்–களை இந்து சமயம் புறக்கணிக்கின்றதா?

இல்லை. இந்து சமயம் போற்றும் விழுமியங்களைப் பற்றிய தப்பான கருத்துக்களுள் இதுவும் ஒன்றாகும். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு விழுமியங்களை வாழ்க்கையின் குறிக்கோள்களாக இந்துசமய சாஸ்திரங்-கள் கூறுகின்றன. இவை புருஷார்த்தங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. வாழ்க்கையின் முதற்கட்டத்தில் (இளமைப் பருவம்), அறக் கல்வியை உலகியல் கல்வி மற்றும் ஒழுக்கவியலோடு, சாஸ்திரங்களின் சாரத்தை நன்கறிந்த தக்க ஆசிரியனிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்ளவேண்டும். தர்மத்தைக் கற்றுத் தெளிந்த பின் அவர் இல்லற வாழ்க்கையுள் புகலாம். வாழ்க்கையின் இந்த இரண்டாம் கட்டத்தில் (வாலிபப் பருவம்), தர்மத்தின் எல்லையுள் நின்று கொண்டு பொருள், இன்பங்களை அவர் அனுபவிக்கும் போது, வாழ்க்கையின் பலதரப்பட்ட அனுபவங்கள் அவருக்குப் படிப்படியாக வைராக்கியத்தை ஏற்படுத்தும். இதன்பின் உள்ளத் துறவுநிலை கைகூடும். அடுத்து வாழ்க்கையின் இறுதிநிலையில் (முதுமைப் பருவம்) வீடுபேற்றுக்கான முயற்சிகளில் ஒருவர் ஈடுபடவேண்டும்.

இந்து சமயம் கூறும் புருஷார்த்தங்களுக்கான இவ்-விளக்கத்திலிருந்து ஓர் உண்மை தெளிவாகின்றது. இந்து சமயம் இவ்வுலக வாழ்கையைப் புறக்கணிக்வில்லை. வாழ்வின் முக்கிய குறிக்கோள்களை அடைவதற்கு இவ்வுடம்பு முதன்மை பெறுவதால், ஆயுர்வேதம் எனும் சாஸ்திரத்தைத் தந்து உடலோம்ப வேண்டிய அவசியத்தை-யும் வற்புறுத்தியுள்ளது.

## 15.மோட்சம் என்றால் என்ன? மோட்ச அனுபவம் எத்தகையதாக இருக்கும்? அந்நிலையை ஒருவர் எங்ஙனம் அடையலாம்?

நாம் உடுக்கும் உடையும், வாழும் வீடும் நம்மிலி-ருந்து வேறானவை. இது நமது நேரடி அனுபவம். அங்ஙனமே நாம் உடம்பிலிருந்தும், புலன்களிலிருந்தும், மனதிலிருந்தும், ஆணவத்திலிருந்தும் வேறானவர்கள் என்பதை உணர வேண்டும். இந்த உண்மையை நாம் நேரடியாக அனுபவிக்-கும் போது, நமது ஆன்ம சொரூபம் வெளிப்படுகின்றது. இந்த நிலையே மோட்சம் எனப்படுகின்றது. இந்நிலையில் மனிதனின் கவலைகளும் துன்பங்களும் முற்றாக அழிக்கப்-படுகின்றன. இந்நிலையை அடைந்தோர் உடல் அழிந்தபின் மீண்டும் பிறப்பதில்லை. ஆன்மாவையுணரும் நிலையாகிய ஆன்மஞானமே மோட்சத்தை நல்குவதாகும். இந்நிலையை விரும்பும் சாதகன் விவேகம், வைராக்கியம், தன்னடக்கம், தியாகம் முதலிய நல்லியல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென சமயம் கூறுகிறது. இதன் பிறகு தக்க குரு-வையடைந்து சாஸ்திரங்களை விளங்கிக் கொள்வதோடு தியானப் பயிற்சி செய்ய, முடிவாக ஆன்ம அனுபவம் ஏற்படும்.

## 16.வேதாந்தம் என்பது என்ன? அதில் வெவ்வேறான பிரிவுகள் உள்ளனவா? அப்படியானால் ஒவ்வொன்றினதும் முக்கியமான போதனைகள் எவை?

அந்தம் என்ற சொல்லின் பொருள் முடிவு அல்லது சாரம் என்பதாகும். உபநிஷதம், வேதத்தின் அந்தமாக அமைந்திருப்பதனாலும், வேதங்களின் சாரத்தைத் தன்-னகத்தே கொண்டிருப்பதனாலும் அது வேதாந்தம் என அழைக்கப்படுகிறது. வேதாந்தக் கருத்தை வகுத்துக் கூறும் பாதராயண முனிவர் இயற்றிய பிரம்மசூத்திரமும், உபநிஷதமாகிய பசுவிடமிருந்து பெறப்பட்ட பாலாகிய பகவத்கீதையும், இவைகளை அடிப்படையாகக் கொண்ட ஏனைய நூல்களும் வேதாந்தம் என்ற பெயரில் அடங்கும். இவ்வனைத்து நூல்களும் முக்கியமாக நான்கு பொருள்-களைப் பற்றிக் கூறுகின்றன. பிரம்மம், ஜீவாத்மா, உலகப் படைப்பு, மோட்சம் என்பனவே அவை.

வேதாந்தத்தின் அடிப்படை நூல்களுக்கு அளிக்கப்-பட்ட வெவ்வேறு விளக்கங்கள் மூன்று முக்கிய பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளன. அவை அத்வைதம், விசிஷ்டாத்துவை-தம், துவைதம் என்பன. சங்கரர், இராமனுஜர். மத்துவர் ஆகிய மூவரும் இம் முப்பிரிவுகளையும் விரித்துரைத்த மூலகர்த்தாக்கள் ஆவர். அத்வைதத்தின்படி பிரம்மம் ஒன்றே உள்ள பொருளாகும். இது தவிர வேறொன்று-மில்லை. இந்த உலகம் அதிலிருந்தே தோன்றி, அதிலேயே நிலைபெற்று, அதிலேயே ஒடுங்குகின்றது. கயிற்றினில் பொய்யாகத் தோற்றமளிக்கும் பாம்பு உண்மையில் கயிறே என்பதைப்போல, பிரம்மத்தில் தோற்றமளிக்கும் உலகமும் உண்மையில் பிரம்மமே. முடிவான ஆராய்ச்சியின்படி ஜீவர்-களும் பிரம்மமே. இவைகளுக்கிடையே உள்ள வேற்றுமை-யும், பிரிவினையும் அஞ்ஞானத்தினால் உண்டாக்கப்பட்ட மாயத் தோற்றமேயாகும். ஜீவனின் உண்மையியல்பு ஆத்மனே ஆகும். ஆத்மா பிரம்மமேயன்றி வேறில்லை. ஆத்ம ஞானமும் பிரம்ம ஞானமும் ஒன்றேயாகும்.

விசிஷ்டாத்துவைதம், ஜீவர்கள் பல என்றும், அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டும், ஈஸ்வரன் எனப்படும் பிரம்மத்-திலிருந்து வேறுபட்டும் விளங்கினாலும், ஒரு வகையில் அவை ஒன்றுக்கொன்று ஒத்தவையே. ஜடமான பிரக்ருதி-யின் (இயற்கையின்) வெளிப்பாடான இவ்வுலகம், பிரம்மனி-லிருந்தும், ஜீவனிலிருந்தும் வேறுபட்டது. இருப்பினும், ஜீவர்களும், பிரக்ருதியும் பிரம்மத்தின் அம்சங்களே, தவிர, பிரம்மத்தின் கட்டுப்பாட்டிலேயே அவை உள்ளன. ஆனால் பிரம்மம் இவை இரண்டையும் கடந்தது. முக்கூறுகளாக விளங்கும் ஈஸ்வரன், உலகு, ஜீவன் மூன்றும் ஒரே பரம்பொருளே என விசிஷ்டாத்வைதம் கூறுகிறது. பக்தி சாதனமே மோட்சத்திற்கு வழி. ஈஸ்வரனின் அருளாலேயே அதனைப் பெறமுடியும்.

துவைத தத்துவமும், விசிஷ்டாத்துவைத தத்துவத்-தைப் போன்றதே. இருப்பினும், அது விசிஷ்டாத்துவைதத்-தைவிட அதிக வேற்றுமையை வலியுறுத்துகிறது. ஆன்மாக்-கள் ஒன்றுக்கொன்று வேறானவை என்றும், உலகப் பொருட்கள் வெவ்வேறானவை என்றும் கூறுகின்றது.

## 17.நாம் அடிக்கடி கேள்விப்படும் யோகம் என்பதன் பொருள் யாது? எத்தனை வகையான யோகங்கள் உள்ளன? நாம் எப்படி அதனைப் பயிற்சி செய்வது?

ஜீவாத்மனை பரமாத்மாவோடு இணைப்பது யோகம் எனப்படும். இந்த இணைப்பிற்கு உதவும் எந்த ஒரு ஆன்மிகப்பாதையும் யோகமாகும். பொதுவாக யோகங்கள் நான்கு வகைப்படும். அவை ஞானயோகம், பக்தியோகம், இராஜயோகம், கர்மயோகம் என்பனவாகும். 15ம் வினாவில் விளக்கப்பட்ட வேதாந்த தத்துவம் ஞான யோகமாகும். இறைவனிடம் பக்தி செலுத்துதல், அவன் திருவுருவைத் தியானித்தல், அவன் திருநாமத்தை ஓதுதல் என்பன பக்தி யோகத்தின் ஆரம்ப நிலைகளாகும். இராஜயோகமானது ஆத்ம தியானத்திற்கான பின்வரும் எட்டு வழிகளைக் கூறு-கின்றது. இயமம் - தீயவற்றிலிருந்து விலகுதல்,

நியமம் -நல்லன கடைப்பிடித்தல், ஆசனம் - ஓரிடத்தில் அமைதியாக அமரும் முறைகளைப் பயிலுதல், பிராணாயாமம் - பிராண-னைக் கட்டுப்படுத்துதல், பிரத்யாஹாரம் - புலன்களை அகமுகமாக்கல், தாரணை - மனதை ஓரிடத்தில் நிறுத்தல், தியானம் - எண்ணெய் ஒழுக்கு போன்ற ஒரே சிந்தனை ஓட்டம், சமாதி - ஆன்ம உணர்வில் ஒன்றிய நிலை என்பன-வாகும். கர்ம யோகமானது பற்றின்றி கடமைகளைச் செய்வதன் மூலமும், உலகுக்குத் தொண்டு செய்வதன் மூலமும், உள்ளம் தூய்மையாவதைக் கூறுகின்றது. இந்த மனத்தூய்மை ஆன்ம அனுபவத்திற்கு இட்டுச் செல்கிறது.

உடல் நலம், உடல் தூய்மை, ஒழுக்க இயல்பு ஆகியவை இந் நான்கு யோகங்களுக்கும் பொதுவான நிபந்தனைகளாகும்.

## 18. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் நினைவுக்கு வருகின்றன. அவை குரு, சீடன், இஷ்ட தெய்வம், மந்திரம், ஓம் என்னும் பிரணவம், தீட்சை, தியானம், ஜபம் என்பன. இவற்றின் பொருள் என்ன?

அறியாமையாகிய இருளை நீக்கி ஞானமாகிய ஒளியைத் தருபவரே **குரு.** குரு இன்றி ஆன்மிக வாழ்வு சாத்தியப்படாது. சாஸ்திரங்களின் உண்மையை உணர்ந்த-வராய், இறை உணர்வில் நிலைத்தவரே குருவாவர். தனது சீடர்களிடம் அளவற்ற கருணையும், அனுதாபமும் உடையவராய் விளங்குபவரே குரு. பயிற்சிக்கும், ஒழுக்க நெறிக்கும் தகுதி உடையவனே **சீடனாவான்.** ஆன்மிக உண்மைகளை அறியும் அதீத ஆர்வமே அவனது முதன்-மைத் தகுதியாகும். இம் முயற்சியில் வரும் இடையூறு-களை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுதலும், குருவிடம் பணிவும் நம்பிக்கையும் பக்தியும் கொள்ளுதலும் சீடனிடம் இருக்க வேண்டிய அடிப்படை குணங்களாகும்.

பக்தி யோகத்தைப் பின்பற்றுவர்கள், தாங்கள் வணங்குவதற்கும், தியானம் செய்வதற்கும், தெரிவு செய்து கொண்ட இறைவனின் ஒரு அம்சமே, **இஷ்ட தெய்வம்** என்பது. தன் விருப்பப்படியோ, குருவின் கட்டளைப்படியோ ஒருமுறை தேர்ந்தெடுத்த இஷ்ட தெய்வத்தை மாற்றலா-காது. இஷ்ட தெய்வத்தின் பெயரே **மந்திரமாகும்.** மந்திர-மானது **ஓம்** என்னும் பிரணவத்தையும் பீஜமந்திரத்தையும் கொண்டுள்ளது. பீஜ மந்திரம் ஒவ்வொரு இஷ்ட தெய்வத்-திற்கும் வெவ்வேறாக அமையும். பிரணவம் எனப்படும் ஓம் என்பது, அ, உ, ம் என்னும் மூல ஒலிகளின் கூட்டொலி-யாகும். இது உலகிலுள்ள எல்லாச் சொற்களினதும், எல்லா ஒலிகளினதும் மூல ஒலியாகும். அதனால் படைக்-கப்பட்ட அனைத்திற்கும் பிரணவமே மூலமாகும் என நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதனாலேயே இறைவனைக் குறிக்கும் அடையாளங்களுள் ஓம் என்பது மிகச் சிறந்த-தாகவும் உயர்ந்ததாகவும் கருதப்படுகின்றது. இந்து சமயம் மாத்திரம் அல்ல, சமணம், பௌத்தம், சீக்கியம் ஆகிய மதங்களும் இம்மந்திரத்திற்கு முக்கிய இடம் கொடுத்துள்-ளன. இஷ்ட தேவதையின் மந்திரத்தை குருவிடமிருந்து சீடன் ஒருசடங்கின் மூலம் பெறுகின்றான். அச்சடங்கு **தீட்சை** எனப்படும். ஊற்றப்படும் எண்ணெய் இடையீடு இன்றி ஒழுகுவது போல மனமானது இஷ்ட தெய்வத்-தையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் நிலையே **தியானம்** ஆகும். **ஜபம்** என்பது தீட்சையின் போது குருவிடமிருந்து பெற்ற மந்திரத்தை ஓதுவதாகும். இதனை முழு நம்பிக்கை-யோடு, பொருளினை உணர்ந்து ஓத வேண்டும்.

## 19. மனிதர்களுக்கு மறு பிறவி உண்டா? அதற்குக் காரணம் யாது?

மனிதர்களுக்கு மறுபிறவி உண்டு. அவரவர் செய்த கருமமே அதற்குக் காரணமாகும். சில விநாடிப் பொழுதில் ஏற்பட்ட தீப்புண் மாறுவதற்குப் பல நாட்கள் (பல மில்லியன் விநாடிகள்) எடுப்பதை நமது அனுபவத்திலிருந்து

அறிகி-றோம். அது போலவே ஒரு பிறவியில் நாம் செய்த நல்வினை மற்றும் தீவினைகளின் வினைப்பயன்களை அனுபவிப்பதற்குப் பல பிறவிகள் தேவைப்படுகின்றன. மறுபிறப்பை ஏற்றுக் கொண்டால்தான் இது சாத்தியப்படும். சமீப காலங்களில் மறுபிறப்பு பற்றி பல ஆய்வுகள் மேற்-கொள்ளப்பட்டு, அதன் விளைவாகப் பல நூல்கள் எழுதப் பட்டுள்ளன. மறுபிறப்புக் கொள்கை முன்னெப்போதும் இல்லாத அளவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மனிதர்களுக்-கிடையில் காணப்படும் வித்தியாசங்களும், தனிப்பட்ட வேறுபாடுகளும், அவர்களின் தற்போதைய வாழ்க்கைச் சம்பவங்களோடு நேரடியாகத் தொடர்புடையதாகத் தோன்ற-வில்லை. உதாரணமாக, ஊனமுற்றுப் பிறக்கும் குழந்தை-கள் அல்லது இரட்டையர்களுடைய மனப்பாங்கில் காணப்-படும் வேறுபாடுகள் இங்கு நோக்கத்தக்கன. இவை எல்லாம் பழவினையின் பயன் என்பதே அறிவுபூர்வமானது. இந்து சமயம், ஆன்மா அழிவற்றது எனக்கொள்ளும் போது, கர்மவிதிக் கோட்பாடும், மறுபிறப்புக் கொள்கையும், அந்த அமைப்புக்குள் அற்புதமாகப் பொருந்துகின்றன. சமணமும், பௌத்தமும், கர்மவிதிக் கோட்பாட்டையும், மறுபிறப்புக் கொள்கையையும் ஏற்றுக் கொள்கின்றன.

## 20. கர்ம விதிக் கோட்பாடு பகுத்தறிவுக்கு ஈடு கொடுக்கக் கூடியதா? இக்கோட்பாடு இந்து சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடையாய் அமைந்துள்ளது அல்லவா?

கர்ம விதிக் கோட்பாடானது தினை விதைத்தவன் தினையறுப்பான், வினை விதைத்தவன் வினையறுப்பான் என்னும் மூதுரையின் விளக்கமாகும். ஒவ்வொரு காரணத்-திற்கும் ஒவ்வொரு காரியம் இருக்கிறது. இப்பிறவியில் ஒருவர் அனுபவிக்கும் நன்மை தீமைக்கான வெளிப்படை-யான காரணங்களை இப்பிறவியிலேயே தேடிக் காண முடியாவிடின், அவை முற்பிறவிகளைச் சேர்ந்தவையாகத் தான் இருக்கவேண்டும். இதுவே கர்மவிதிக் கோட்பாட்டின் பின்னணியிலுள்ள தர்க்கமாகும். ஒருவர் தான் செய்த செயலின் விளைவை உடனே அனுபவிக்காது விட்டாலும் எதிர்காலத்திலாவது அனுபவிக்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது. இப்பிறவியில் நாம் அனுபவிக்கும் வாழ்க்கை முற்பிறவியின் பயனாகும். அடுத்த பிறவியில் அமையப் போகும் வாழ்க்கை, இப்பிறவியைப் பொறுத்தே அமைகிறது. இதுவே கர்மவிதிக் கோட்பாட்டின் சாரமாகும்.

கர்மவிதிக் கோட்பாட்டையும் மறுபிறப்பையும் நாம் ஏற்காவிட்டால், இப்பிறவியில் செய்யாத வினைகளுக்காக அனுபவிக்கும் இன்ப-துன்பங்களைத் தர்க்கரீதியாக எம்மால் விளங்கப்படுத்த முடியாது. அந்நிலையில் கடவுள் பக்கச்-சார்பானவர் என்றோ, கொடுமையானவர் என்றோ, உலகை வழிநடத்தும் கடவுள் என்று எந்தவொரு சக்தியும் இல்லை என்றோ, காரியங்கள் எவ்வித ஒழுங்குக்கும், காரணத்திற்கும் உட்படாது தானாகவே நடக்கின்றன என்றோ, ஏதாவது ஒன்றை ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இதை விவேகமுள்ள எவரும் ஒப்புக்கொள்ளார். நம் வாழ்வில் ஏற்படும் பலவகையான முரண்பாடுகளுக்கு, நம்பத்தக்க விளக்கங்களைக கர்மவிதிக் கோட்பாடு தருகிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

கர்மவிதிக் கோட்பாட்டினைச் சரியாகப் புரிந்து கொண்டால், இந்து சமூகம் விரைந்து முன்னேறும், பிறர் கூறுவது போல பின்னடையாது. எமது இன்றைய நிலைக்கு எமது முன்னைய தவறுகளும் கவனயீனங்களுமே காரண-மானால், இப்போது பொருத்தமான முயற்சியை மேற்-கொள்வதன்மூலம் எமது எதிர்காலத்தை உயர்வானதாக ஆக்க முடியும். இதுவே நமது வாழ்க்கைத் தத்துவமாக அமைய வேண்டும். நம்பிக்கை தரும் இந்தத் தத்துவம் தனிமனித முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. சில கால கட்டங்களில் இந்து

சமுதாயம் பின்னோக்கிய திசையில் இருந்ததெனில், அதற்குக் காரணம் அது கர்ம விதிக் கோட்பாட்டை பிழையாக விளங்கிக் கொண்டதன் விளைவே எனலாம்.

## 21. நாம் வாழும் இவ்வுலகும் நாம் காணும் இப்பிரபஞ்சமும் எங்ஙனம் உண்டாக்கப்பட்டன? இயற்கையின் இத்தோற்றம் பற்றி விளக்க இந்து சமய நூல்கள் ஏதேனும் முயற்சி செய்துள்ளனவா? அந்த விளக்கங்கள் விஞ்ஞான ஆய்வுக்கு ஈடு கொடுக்கக்கூடியனவா?

இந்த உலகப் படைப்பைப் பற்றியும், படைப்பின் பின்னணியில் உள்ள இரகசியங்களைப் பற்றியும், பிறப்பு இறப்பைச் சூழ்ந்துள்ள இரகசியங்களைப் பற்றியும், நன்மை தீமைகளால் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றியும், மனித வாழ்வின் முடிவான குறிக்கோள் பற்றியும், இன்னும் இது போன்ற கேள்விகள் பல, நினைவுக்கெட்டாத நெடுங்கால-மாக, அறிவு பூர்வமான தீர்வைக் காணமுடியாது, மனித அறிவுக்குச் சவாலாக இருந்து வந்திருக்கின்றன. எமது ரிஷிகள் தங்கள் ஆன்மிக அனுபங்களையும், வேதம் கூறும் உண்மைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவற்றுக்கு தீர்க்கமான முடிவை அளித்திருக்கிறார்கள். “அறுவகை தரிசனங்கள்” எனப்படும். இந்து தத்துவஞானவியல், ரிஷிகளின் நேரடி அனுபவத்தாலும், ஆராய்ச்சியாலும் பெற-ப்பட்ட முடிவுகளாகும். படைப்பு பற்றிய பல்வேறு விளக்கங்-களை அவற்றில் காண்கிறோம்.

கௌதமரின் நியாய தரிசனமும், கணாதரின் வைசேடிக தரிசனமும், அழிவற்ற அணுவிலிருந்து பரமாத்-மனால் இவ்வுலகு படைக்கப்பட்டதாக நம்புகின்றன. இந்த அணுக்களின் சேர்க்கை உலகப் படைப்பையும், அணுக்-களின் பிரிவு உலக அழிவையும் உண்டாக்குகின்றன.

கபிலரின் சாங்கிய தத்துவமும், பதஞ்சலியின் யோக தத்துவமும், முகவராகச் செயற்படும் புருஷர்களின் (ஜீவாத்-மாக்கள்) முன்னிலையில் பிரக்ருதி (மூலஜடம்) இப்பிரபஞ்சம் ஆகப் பரிணமிப்பதாகக் கூறுகின்றன. உலகப் படைப்பின் நோக்கமே ஆன்மாக்களின் நலனும், அவற்றின் ஆன்மீக மலர்ச்சியின் மூலம் இறுதி முடிவாகிய வீடுபேற்றைப் பெற்-றுக் கொடுப்பதும் ஆகும். நிலம், நீர் முதலிய ஐம்பூதங்-களும், கண், காது முதலிய ஐம்புலன்களும், பிரக்ருதி தத்துவத்திலிருந்தே தோன்றுகின்றன. பிரபஞ்சமென்பது இம் மூலதத்துவங்களின் ஒழுங்கு மாற்றத்தினாலும், கூட்டமைப்-பினாலும் உண்டாவதாகும். உண்மையில் பிரக்ருதியோடு தொடர்பற்றிருப்பினும், எந்த ஒரு புருஷனாவது பிரக்ருதியின் படைப்புக்களின் மீது பற்று கொண்டால், அவன் பிறப்பு-இறப்பு எனும் பந்தத்தில் அகப்பட்டு விடுகிறான். விவேகத்-தினாலும், நல்லறிவினாலும், பிரக்ருதியின் தொடர்பைத் துண்டிக்க முடியுமானால் அவன் விடுதலை பெறுவான்.

ஜெய்மினியின் பூர்வ மீமாம்சை எனப்படும் தத்துவ-மானது, ஜீவர்களின் பிராரப்த கர்மத்தினால் (பலனைக் கொடுக்க ஆரம்பித்துள்ள முற்பிறவிக் கர்மம்) உந்தப்பட்டு, பிரக்ருதி தானாகவே இப் பிரபஞ்சமாகப் பரிணமிக்கிறது என்பதாகும்.

பாதராயண-வியாசர் என்பவர் விளக்கிய வேதாந்த தத்துவமானது, முழுமுதற் பொருளாகிய பிரம்மமே தன்னி-லிருந்து இவ்வுலகைத் தோற்றுவித்து, நிலைநிறுத்தி, யுக முடிவில் தன்னுள் ஒடுக்கிக் கொள்கிறது என்று கூறுகிறது. அதாவது, இரண்டற்ற ஒன்றாகிய முழுமுதற் பரம்பொருளே பலவாகி, இப் பிரபஞ்சமாகப் பரிணமித்து, மீண்டும் மூலப் பரம்பொருளில் ஒடுங்குவதே இதன் பொருளாகும். இது ஓரளவிற்கு, சிலந்தியின் வாயிலிருந்து வலை வெளிவரு-தல், நெருப்பிலிருந்து பொறிகள் தோன்றுதல், நிலத்தில் இருந்து தாவரங்கள்

உண்டாதல் போன்றது. உலகில் உள்ள அனைத்தும் உண்மையில் பிரம்மமே; பிரம்மம் அல்லாத ஒன்றுமில்லை. இங்ஙனம் வேதாந்தமானது பிரபஞ்சத்திற்குப் பின்னாலுள்ள அடிப்படை ஒருமைப்-பாட்டினை விளக்குகின்றது.

மின் அணுக்களே ஜடப்பொருட்களின் அடிப்படை வஸ்து; அவற்றின் மாறுதலும், இணைதலுமே இவ்வுலகப் பொருட்களின் தோற்றத்திற்கு காரணம் என்னும் நவீன விஞ்ஞானக் கோட்பாட்டை நோக்கும் போது, நவீன விஞ்-ஞானம் பழமையான வேதாந்தக் கோட்பாட்டை நோக்கியே விரைந்து கொண்டிருக்கிறது எனத் தீர்மானிக்கத் தூண்டு-கிறது. நவீன விஞ்ஞானமானது இன்னும் மனம், உணர்வு, உயிர் என்பன பற்றி சந்தேகத்திற்கு இடமின்றி விளக்க இயலாத நிலையில் இருக்கும் போது, வேதாந்தமோ தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் உள்ள பிரம்மமே அடிப்படை-யான வஸ்து என்றும், அதிலிருந்தே ஏனையவை வெளிப்-படுகின்றன எனவும் கூறுகின்றது. வேதாந்தத்தின் இந்த உறுதி மொழியானது, நவீன விஞ்ஞானத்தின் புதிய கண்டு பிடிப்புகளுக்கும், அது கூறும் பிரகடனங்களுக்கும் அப்பால் சென்றுள்ளது.

## 22. இந்து சமுதாயத்தில் சாதி முறை ஆழமாகவும் உறுதியாகவும் வேரூன்றி இருக்கிறது. அதன் அடிப்படையில் ஒருவரை – யொருவர் வெறுப்பதும், அதன் விளைவாக விரோதங்களும் அடிக்கடி தலைகாட்டுகின்றன. வர்ணாசிரம முறையே இந்த நிலைக்குக் காரணம் எனப் பரவலாக நம்பப்படுகின்றது. இதில் எந்த அளவு உண்மையிருக்கிறது? சாதி முறை எங்ஙனம் உருவானது?

வேதகாலத்தின் ஆரம்பத்தில், சமூகமானது சுயமாக சிந்தித்து செயற்படும் ஆற்றலுடைய இருபிறப்பாளர் (த்விஜர்) எனும் பிராமணர், மற்றும் அவ்வாறு செயற்பட முடியாத சூத்திரர் என்ற இருபெரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்த-தாகத் தெரிகிறது. காலகெதியில் சமூகம் வளர்ச்சியடைந்த போது, பிரிவினைகள் தவிர்க்க முடியாதவையாகிவிட்டன. இப்பிரிவுகள், அவரவர் குணம் அல்லது சுபாவத்திற்கேற்ப அமைவனவாயிற்று. மேலும் அவர்கள் செய்து வந்த தொழில்களும் இவற்றை நிர்ணயித்தன. வர்ணப்பிரிவின் ஆரம்ப காலகட்டத்தில் பிராமணருக்கும், ஏனையவர்களுக்-கும், தாம் விரும்பிய தொழிலைத் தெரிந்தெடுக்கவோ, மாற்றிக் கொள்ளவோ, பூரண சுதந்திரம் இருந்தது. வேகமாக வளர்ச்சி பெற்று வரும் சமூகத்திலுள்ள நடைமுறைப் பிரச்சினையால் ஒருவரது குணத்தையோ சுபாவத்தையோ வைத்து ஒருவரை அழைப்பது முடியாதிருந்தது. எனவே மிகச் சுலபமான வழியாகிய பரம்பரையை வைத்தே ஒருவரை இனம் காணும் முறை மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய வளர்ச்சிக் கட்டத்தில் வர்ணமும் சாதியும் ஒன்றோடொன்று கலந்து விட்டன. பல்வேறு தொழில்களும் வியாபாரங்களும் வளர்ச்சியடைந்ததினால், பல்வேறு பிரிவி-னரின் கலப்பு ஏற்பட்டு, சாதிப் பிரிவுகளும் பல்கிப் பெருகத் தொடங்கின. இங்ஙனம் சாதியானது ஒருவரது பிறப்பையும், பரம்பரையையும் வைத்து முடிவு செய்யப்பட்டது.

சாதிப்பிரிவானது பல்லாயிரக்கணக்கான ஆண்டு-களாக நிலைத்திருப்பதால் அதில் பயனுள்ள, மதிக்கத்-தக்க அம்சங்கள் இருக்கத்தான் வேண்டும். குறிப்பிட்ட ஒரு சாதியில் பிறந்த எந்த ஒருவரும் தான் அந்தப் பிரிவுக்கு உரியவன் என்று உணர்வதால், அவருக்கு அது பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கிறது. இச் சாதிப்பிரிவு பரம்பரையான ஒரு தொழிலைப் போட்டியின்றி கற்றுக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. தம் உறவினருக்குள்ளேயே திருமண உறவை வளர்த்துக் கொள்வதால் தேவை ஏற்படும் போது ஒருவர்க்கொருவர் உதவ முடிகின்றது. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த சிறுவன், அச்

சாதிக்குரிய தொழில் வளர்வதற்கு சாதகமான சூழலில் வளர்வதால், தன் திற-மையை வளர்த்துக் கொள்வதற்கு அவன் அதிக சந்தர்பங்-களைப் பெறுகிறான். இருப்பினும், தன் பரம்பரைத் தொழி-லிலும் பார்க்க மற்றொரு தொழிலில் பிரகாசிக்கக் கூடிய ஒருவனது முன்னேற்றத்திற்கு, இச்சாதியமைப்பு ஒரு தடை-யாய் அமைகின்றது. இதைத் தவிர இச்சாதி அமைப்பில் நாம் வெட்கப்பட வேறொன்றுமில்லை.

அப்படியானால், பல்வேறு சாதிப்பிரிவினருள் ஏன் குரோத உணர்வு நிலவுகிறது? தாங்கள் பெற்ற கல்வி-யையும், அதிகாரத்தையும், செல்வத்தையும் ஜீரணித்துக் கொள்ளமுடியாது, அவற்றைப் பயன்படுத்தி சாதாரண பாமர மக்களை சூறையாடும் கர்வமும், சுயநலமும் கொண்டவர்-களே இதற்குக் காரணம். மரியாதையைப் பெற்றுக்-கொள்ளும் தகுதியை வளர்த்துக்கொள்ளாது, அதை உரிமையுடன் எதிர்பார்க்கும் ஆணவப்போக்குக் கொண்ட சாதிக் கட்டமைப்பைவழக்கத்துக்கு கொண்டுவந்தவர்கள் இவர்கள்தான். எனவே தவறு இவர்களைச் சேர்ந்ததே தவிர சாதி அமைப்பை அல்ல. ஒரு சிலருடைய தவறுக்-காக முழு அமைப்பையுமே தவறாகக் கொள்வது சரியாகாது. நகரகாவலர் அல்லது அரசஊழியர் ஒரு சிலர் செய்யும் பிழைக்காக அரசாங்க நிர்வாக அமைப்பையே குறை சொல்ல முடியுமா?

பலவகைப்பட்ட சாதிப்பிரிவுகளையும் ஒரு அலுவல-கத்தின் பல்வேறு நிர்வாகப் பகுதிகளோடு ஒப்பிடலாம். சமுதாயத்தின் பொதுநலன் கருதி பல்வேறு பணிகளை-யும், பொறுப்புக்களையும் வகிக்கும் பலவகைப்பட்ட குழுக்-களே அவை. எனவே இவற்றிக்கிடையே நிலவும் உட்பகை முழுச் சமுதாயத்தையுமே அழித்து விடும். யார் இதற்குக் காரணமாக இருக்கிறார்களோ அவர்களையும் சேர்த்து அழித்துவிடும்.

குறிப்பிட்ட சாதியினர், குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்னும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்தது. சில தொழில்கள் சிறந்தவை, உயர்ந்தவை என்னும் சிந்தனை சமுதாயத்தில் நுழைந்ததைத் தொடர்ந்து சாதி அமைப்பிலும் நுழைந்து, சாதிகளிடையே பிரச்சினை-களை உருவாக்கியுள்ளது. எல்லோரும் தாம் விரும்பிய துறையைத் தெரிவுசெய்து பயிற்சிபெற உரிமையும் வசதி-யும் இருப்பதால் இன்று சாதிப்பிரிவு தொடர வேண்டும் என்னும் நியதி இல்லை. நவீன கல்வியமைப்பில் பயிற்சி நெறிகள் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருப்பதால் சாதிப்-பிரச்சினை அர்த்தமற்றது மட்டுமல்ல, அழிவுக்கு இட்டுச் செல்லும் அறியாமையுமாகும்.

## 23. இதனோடு தொடர்புடைய இன்னும் இரண்டு வினாக்களை எழுப்ப முடியும். சாதித் தடையை மீறும் சமபந்திப் போசனத்தை இந்து சாஸ்திரங்கள் தடுக்கின்றனவா? கலப்புத் திருமணங்கள் சாஸ்திர சம்பந்தமானவையா?

நல்லொழுக்கம் உடைய எந்த சாதியினரிடமிருந்தும் பிராமணர்கள் உணவு ஏற்பதை பல தர்ம சாஸ்திரங்கள் அனுமதிக்கின்றன. எனவே இந்து சமய சாஸ்திரங்கள் சமபந்திப் போசனத்தில் தலையிடுவதில்லை. இருப்பினும் இன்றைய இந்து சமூகத்தில் முரண்படும் பல சாதிப் பிரிவுகளை ஒன்று சேர்க்க, இந்த சமபந்திப் போசனமுறை பெரிதும் உதவியாக இருக்கும்.

இதே தர்ம சாஸ்திரங்கள், உயர்சாதி ஆண்மகன், உயர் சாதியல்லாத பெண்ணை திருமணம் செய்யும் அனுலோம விவாகத்தை ஏற்றுக்கொள்கிறது. உயர் சாதிப் பெண்ணை உயர்சாதியல்லாத ஆண் மணந்து கொள்ளும் எதிர்மறையான பிரதிலோம விவாகத்தையும் பழங்காலம் முதல் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே கலப்புத் திருமணம் இந்து சமயத்தில் தடை செய்யப்படாத ஒன்றா-கும். இருப்பினும் இன்றைய நவீன சமுதாயத்தில் இத்-தகைய திருமணங்கள் எதிர் விளைவுகளை ஏற்படுத்து-கின்றன. இது

உணர்வுபூர்வமான விடயமாதலால் பலாத்காரத்தை தவிர்த்து உடன்பாட்டு முறையில் தீர்வு காணவேண்டும். சம்பந்தப்பட்ட தம்பதியர்களின் பெற்றோர் மற்றும் பெரியவர்கள் தம்பதியினருடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்ததும் இரு சாதிகளையும் சார்ந்தவர்கள் திருமணம் நடந்தேற ஒத்துழைக்க வேண்டும். அத்தகைய ஒரு உடன்-பாடு கிட்டாதவிடத்து இருதரப்பு பெரியவர்களும் தம்பதி-யினரிடம் அவர்கள் எடுத்த முடிவின் எதிர்விளைவு பற்றி எடுத்துக்கூறி அவர்களின் முடிவை மாற்றும்படி கேட்க வேண்டும். இது வெற்றியளிக்காவிட்டால் தம்பதியினரின் முடிவிற்கே விட்டுவிடுவது நல்லது. அவர்கள் ஒரு தர்ம வாழ்வை நடத்துவதே போதுமானது.

ஒவ்வொரு வர்ணத்திலிருக்கும் உட்பிரிவுகளும் குழு-க்களும் படிப்படியாக ஒன்றுபடுதல் இன்றைய தேவையும் பொருத்தமானதுமாகும். சுவாமி விவேகானந்தர் தெரிவித்த தீர்வே, தொல்லை மிகுந்த இப்பிரச்சினைக்கு தீர்வாகும். பொருளாதாரம், கலாச்சாரம், ஆன்மிக உயர்வு முதலிய-வற்றை வழங்கக் கூடிய பொருத்தமான கல்வியை வழங்கி சமூகத்தை சமநிலைப்படுத்தி சாதிப்பிரிவற்ற ஒரு சமுதாய-த்தைக் காணவேண்டும் என்பது அவரது ஆழ்ந்த சிந்தனை-யிலுதித்த தீர்க்கதரிசனமாகும். அதுவரை, மூத்த சகோதரர், ஊனமுற்றிருக்கும் தமது இளைய சகோதரர்களுக்கு உதவுவது போல, முன்னேறியுள்ள சமூகப்பிரிவினர் பின்-தங்கியுள்ள மக்களுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களை முன்னேற்ற வேண்டும்.

### 24. எல்லாச் சிந்தனையாளர்களும், தீண்டாமை என்பது இந்து சமூகத்தில் ஏற்பட்டுள்ள ஒரு கறை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்கள். அங்ஙனம், பிறரைத் தாழ்த்தி வைப்பது சாஸ்திர சம்மதமா? இல்லையானால் எப்படி இந்த வழக்கம் வளார்ச்சியடைந்தது? இந்து சமய மறுமலர்ச்சியாளர் இதனை அகற்றுவதற்கு எடுத்த முயற்சிகள் யாவை?

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதில் இரண்-டாவது கருத்து இல்லை. இது இந்து சமுதாயத்தின் கறை என எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வேதங்-களோ, தர்ம சாஸ்திரங்களோ, வெறுக்கத்தக்க இவ்வழக்-கத்திற்கு அனுமதி வழங்கியிருப்பதாக நாம் அறியவில்லை. உடல் தூய்மையும், சடங்கு ரீதியான தூய்மையும் பேணப்-பட வேண்டிய சிலசந்தர்பங்களில் சிலவித தீண்டாமையை சாஸ்திரங்கள் முன்மொழிந்துள்ளன. கடந்த சிலநூற்றாண்டு-களாக இந்து சமூகம் வழக்கப்படுத்தி வரும் அறியாமை-யோடுகூடிய தீண்டாமைக்கும், இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இதனை இன்னும் விளக்குவோம். பின்வருவோர் தீண்டத்தகாதவர்களாகக் கணிக்கப்படுகிறார்கள். அவர்-களோடு தொடர்புகொள்ள நேரிடின் தொடர்பு கொண்டவர்-கள் நீராடித் தம்மைத் தூய்மை செய்துகொள்ள வேண்டும். பிறப்பு, இறப்பு நிகழும்போது ஏற்படும் தீட்டு, மாதவிடாய்க் காலத்துப் பெண்கள், உணவருந்திய பின் கை அலம்பாத-வர்கள், தம் உடலையும் உடையையும் அழுக்காக்கும் தொழில் செய்வோர், வர்ண ஆசிரம தர்மத்தில் விதிக்கப்-பட்ட கடமைகளைச் செய்யாதவர்கள், பாவிகளும் கொலை-காரர்களுமான மக்கள் ஆகியோர் தீண்டத்தகாதவர்கள் ஆவர். இத்தகைய தீண்டாமைகூட புனித தலங்களிலும், தேர்த் திருவிழா போன்ற விழாக்களிலும், தேசிய அவசர காலத்தின் போதும் கடைப்பிடிக்க வேண்டியதில்லை என அதே சாஸ்திரங்கள் அங்கீகாரம் அளித்துள்ளன. சில சாஸ்திரங்கள், தாழ்ந்த சாதி எனப்படும் ஹரிஜனர் (தீண்டத்தகாதவர்கள்) கூட கோயிலுக்குள் போய் வழிபடு-வதை அனுமதித்துள்ளன. இன்று நடைமுறையில் உள்ள தீண்டாமை, தன்னலமும் குறுகிய நோக்கம் கொண்ட மக்களின் கைங்கரியமாகும். இங்ஙனம் ஒதுக்கி வைத்ததி-னாலேயே அவர்கள் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்-கள். ஆனால்

அத்தகையோரின் பொருளாதார, கலை, கலாசார வளர்ச்சிக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காதிருந்தது மன்னிக்க முடியாத செயலாகும். அத்தகைய ஒதுக்கு முறை, அவர்களின் சுகாதாரம், உடல்நலம் பற்றியதாகவும் இருந்தது. தன்னலமிக்க பொருளாதார நலனில் உள்ள விருப்பமே இம்முறை மேலும் வளர உதவுகின்றது. இந்த ஒதுக்கு முறைக்கும் இந்து சமயத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. தாழ்குலத்தில் பிறந்த பல பக்தர்களும் ஞானி-களும் எல்லோரலும் போற்றப்பட்டு வருதலே இக்கூற்றை நிரூபிக்க போதிய சான்றாகும்.

தற்போது தேசத்தின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைக்கும் இப்பிரச்சினை தொடர்பான ஒரு விழிப்புணர்வு நாட்டில் ஏற்பட்டுள்ளது. பழைய வைதீக இந்து சமயத் தலைவர்களும் வெவ்வோறு மடங்களின் தலைவர்களும் கடைப்பிடித்து வந்த உணர்வற்ற பழைய அணுகுமுறைகள் ஆட்டம் கண்டு வருகின்றன. இந்தக் குறைபாட்டை நீக்கு-வதற்காக பின்வரும் வழிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்-றன. தீண்டத்தகாதவர் எனப்படுவோரை கோயிலில் அனு-மதித்தல், சமய விழாக்களில் பங்கேற்க சம சந்தர்ப்பம் வழங்கல், சமபந்தி போசனங்களில் வேறுபாடின்றி அழைத்-தல், அவர்களிடையே சமயத்தையும் கலாசாரத்தையும் பரப்ப விஷேட முயற்சியெடுத்தல் போன்ற திட்டங்கள் தீண்டாமையை ஒழிக்க நடைமுறைப்படுத்தப் படுகின்றன. இருப்பினும் இத்துறையின் வளர்ச்சியானது மிகவும் மெது-வாகவே செல்கிறது. விரைவுபடுத்தல் அவசியமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவித்து வரும் பிரச்-சினைகளுக்கு சிறந்த நிவாரணம் விரைவான பொருளாதார முன்னேற்றமும், சரியான அணுகு முறைகளையும் விழுமி-யங்களையும் உடைய கல்வி முறையுமாகும். பல நூற்றா-ண்டுகளாக நமது சமூகத்தைப் பீடித்த தீராத தொற்று நோயாகிய தீண்டாமை என்னும் கறையை இந்த இரு-முனைப்பட்ட வளர்ச்சி தானாகவே அழித்துவிடும்.

## 25. வருண ஆசிரம முறை என்பது என்ன? இன்றும் இம்முறை வழக்கில் உள்ளதா?

ஆன்ம விடுதலை அல்லது மோட்சமே வாழ்வின் மேலான குறிக்கோள் என்பது இந்து சமயம் கூறும் விழுமி-யமாகும். இருப்பினும், பற்று, வெறுப்பு, காமம், பேராசை, கோபம் முதலான கீழான உணர்வுகள் மனிதனின் ஆன்மிக வளர்ச்சிக்கு இடையூறுகளாக அமைகின்றன. பழங்கால முனிவர்கள் தங்கள் அபூர்வமான உள்ளுணர்வால் மனித மனங்களை ஆராய்ந்து நாம் அனுபவிக்க வேண்டிய விருப்-பங்களையும், உணர்வுகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்து வாழும் வழிகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்த நோக்கிலிருந்து பார்க்கும் போது நான்கு வகை புருஷார்-த்தங்களும் அபூர்வமான ஒரு கொடையாகும். ‘‘நன்கு சம்பாத்தியம் செய், வாழ்வில் நல்லனவற்றையெல்லாம் உளமார அனுபவி, ஆனால் எல்லாவற்றையும் தர்ம வழி-க்கு உட்பட்டே செய்க’’ - இதுவே அவை கூறும் ஒப்பற்ற செய்தியாகும். இக்கோட்பாட்டை அதிக கவனத்தோடு செயற்படுத்தும் போது, எல்லா பலவீன உணர்வுகளும், தொல்லைகளும் படிப்படியாகக் குறைந்து ஒருவனை மோட்சத்திற்குத் தகுதியாக்கும்.

ஒவ்வொரு தனி மனிதனும் ஆன்ம விடுதலை பெறு-வதற்கு நான்கு விதமான ஆசிரம வாழ்வை அல்லது படித்தரங்களை மேற்கொள்ள வேண்டும். பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன அந்த நான்கு ஆசிரமங்களாகும். உலகியல் அறிவு மற்றும் ஆன்மிக அறிவைத் தேடுவதோடு, புலனடக்கமும் பழகுவது பிரமச்சரியத்தின் முக்கிய நோக்கமாகும். இரண்டாவதாகிய இல்லறத்தில், தர்மத்திற்கு உட்பட்டு பொருள் தேடவும்,

இல்லற இன்பத்தை அனுபவிக்கவும் ஒருவன் அனுமதிக்கப்-படுகிறான். தக்கவர்க்கு தானம் செய்வது இந்த ஆசிரம-த்தின் கடமையாகும். முதுமையின் தொடக்க நிலையில், உடல் வலுவோடு இருக்கும் போதே, மனைவியுடனோ தனித்தோ வனம்சென்று தியானத்தில் ஈடுபடுவது வானப்-பிரஸ்தம் ஆகும். இது ஓர் இடைப்பட்ட நிலையாகும். இறுதி நிலையே சந்நியாசம் ஆகும். கீழான உணர்வுகளை-யும் ஆசைகளையும் முற்றாகத் தியாகம் செய்து வைராக்-கியத்தோடு, ஆன்ம விடுதலைக்காக முயலுவதே இந்த ஆசிரம முறையின் முக்கிய பண்பாகும். இந் நான்குவித ஆசிரம வாழ்க்கை முறையில் சந்நியாச ஆசிரமம் பெருமைக்குரிய மகுடமாக விளங்குகிறது.

இந்த ஆஸ்ரமங்களை ஒன்றன் பின் ஒன்றாகக் கடைப்பிடிப்பது முறையாகிலும் விதிவிலக்கும் உண்டு. தீவிரமான துறவற நாட்டமும், ஆன்ம விடுதலையில் விருப்பமும் மேலோங்கியுள்ளவர்கள் எந்த நிலையிலும் சந்நியாச நிலைக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

தனிமனித வாழ்க்கை என்பது பூரணத்துவத்தை நோக்கிய ஒரு யாத்திரையாகும். இந்த யாத்திரையைப் பாதுகாப்பாகவும் இலகுவாகவும் ஆக்குவதே இந்த ஆசிரம முறையின் நோக்கமாகும். சமுதாயத்தின் ஓர் அங்கமான தனிமனிதனுக்குப் பொருத்தமான ஒரு சூழ்நிலை தேவை-யாகும். அத்தகைய சூழ்நிலையை உருவாக்க எடுத்த முயற்சியின் விளைவே வருண ஆசிரம முறையாகும். குணத்தையும் தொழிலையும் அடிப்படையாகக் கொண்டு நிலவிவரும் நால்வகைப் பிரிவையும் ஏற்றுக்கொள்வதே இதன் நோக்கமாகும். நால்வகை வர்ணங்களாவன பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்.

அந்தணர் (பிராமணர்) என்போர் கல்வியும், ஞானமும், தவமும் உடையவராய், ஞானத்தைப் பெறுவதிலும், அதைப் பிறருக்கு வழங்குவதிலும் தம் வாழ்வை அர்ப்-பணித்தவர்கள் ஆவர். ‘‘எளிய வாழ்வு, உயர்ந்த சிந்தனை’’ என்னும் இலட்சியத்தின் உருவகமே அவர்கள். அரசர் (சத்திரியர்) எனப்படுவோர், அந்நியர் முற்றுகையைத் தடுத்து, நாட்டில் சட்டமும், ஒழுங்கும் நிலவச் செய்வதற்-காக ஆயுதம் ஏந்தி நாட்டைக் காக்கும் வீரராவர். இவர்களில் பலர், குறிப்பாக அரசர்கள், சிறந்த ஆன்மீக நிலைகளுக்கு உயர்ந்தனர்.

வணிகர் (வைசியர்) என்போர், விவசாயத்திலும், வியாபாரத்திலும் ஈடுபட்டு, செல்வத்தை ஈட்டி, பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை வினியோகிப்பவராவர். உடல் உழைப்பால் வாழ்ந்து ஏனைய மூவருணத்தாருக்கும் பணிபுரிந்து வாழ்வோர் சூத்திரர் ஆவர்.

இன்று நடைமுறையில் இல்லறம், துறவறம் எனும் இரு பிரிவே உள்ளன. எண்ணிக்கையற்ற சாதிகளின் சுழலில் வர்ணப் பிரிவுகள் மாய்ந்து மறைந்து விட்டன.

## 26. சம்ஸ்காரம் என்பது என்ன? எமது சாஸ்திரங்களில் எத்தனை சம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டுள்ளன? எதற்காக அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்? இன்றைய இந்து சமயத்தில் இன்றும் உள்ளதும், அனைத்துத் தரப்பினற்கும் பொருத்த – மானதுமான சம்ஸ்காரங்கள் எவை?

எமது வாழ்வை ஒரு யக்ஞத்தோடு ஒப்பிட்டுக் கூறலாம். யக்ஞம் என்பது வேள்வியாகும். வேள்வி செய்யப் பயன்படுத்தப்படும் கருவிகள் தூய்மைபடுத்தப்படுவதைப் போல, ஒவ்வொரு இந்துவும் சில சடங்குகள் மூலம் தன் உடலையும், மனதையும் தூய்மை செய்ய வேண்டும். தூய்மைக்காக செய்யப்படும் இத்தகைய கிரியைகளே சம்ஸ்காரங்கள் எனப்படும். இவை சமயக் கிரியையாக இருப்பினும் இவற்றிற்கு சமுதாய பரிமாணமும் உண்டு.

சம்ஸ்காரங்கள் பதினாறு வகைப்படும். அவற்றுள் ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம், உபநயனம், விவாகம், அந்தியேட்டி என்பன முக்கியமானவைகள்.

ஜாதகர்மம் என்பது குழந்தை பிறந்தவுடன் செய்யப்-படுவதாகும். இங்கு குழந்தையின் காதில் அதன் தந்தை-யால் மந்திரம் ஓதப்படும். இதன் நோக்கம் குழந்தையின் அறிவையும் ஞாபக சக்தியையும் வளர்ப்பதும், அதன் ஆயுளை நீடிப்பதும், குழந்தைக்கு நல்ல உடல் நலத்தை அளிப்பதும் ஆகும். இன்று இது நடைமுறையில் இல்லை.

நாமகரணம் எனப்படும் பெயர் சூட்டல். குழந்தை பிறந்து 10வது அல்லது 12வது நாளில் இடம்பெறும். தெரிந்-தெடுக்கப்பட்ட பெயர் பொதுவாக ஒரு ஆண் அல்லது பெண் தெய்வத்தின் பெயராகவோ அல்லது ஒரு மகானின் பெயராகவோ அமையும்.

குழந்தைக்கு முதல் உணவூட்டும் சடங்கு அன்னப்-பிராசனம் எனப்படும். உணவை முதலில் குல தெய்வத்-திற்குப் படைத்து பின்னர் குழந்தைக்கு ஊட்ட வேண்டும்.

உபநயனத்தோடு வேதநூற்படிப்பும், ஆன்மிக சாதனையும் ஆரம்பமாகின்றன. எனவே இது மிக முக்கிய-மானதாகக் கருதப்படுகின்றது. உபநயனம் (உப - அருகில், நயன - அழைத்துச் செல்லல்) என்றால் கல்விக்காக ஒரு குருவை அணுகுதல் என்பது பொருளாகும். உடலின் பிறப்பு, முதற்பிறப்பாகும். உபநயனம், ஆன்மிகப் பிறப்பா-கிய இரண்டாவது பிறப்பாகும். இந்த சம்ஸ்காரத்தை மேற்கொண்டோர் த்விஜர் அதாவது இருபிறப்பாளர் எனப்-படுவர். அரைஞாண் கயிறும், கௌபீனமும் பெற்று, பூணூல் பூண்டு, காயத்திரி மந்திர உபதேசம் பெற்று பிட்சையேற்பது போன்றவை உபநயனச் சடங்கின் முக்கிய பகுதிகளாகும்.

கௌபீனம், புலனடக்கத்தையும், பிரம்மச்சரிய வாழ்-க்கையையும் உணர்த்துகிறது. பூணூல் அணியத் தொடங்-கிய நாளிலிருந்தே, சமுதாயத்திற்கே தன்னை அர்ப்பணிக்-கும் வாழ்கையாக மாறுகின்றது. காயத்திரி மந்திரமானது, ஞானத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, ஆன்மீக முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. சமுதாயத்திற்குக் கடமைப்பட்டவன் என்ற உணர்வை பிட்சை ஏற்றல் மாண-வனுக்கு உணர்த்துகின்றது. இங்ஙனம் பிட்சை ஏற்று உண்டவர், தன் வாழ்நாள் முழுவதும் தன்னால் முடிந்த வரை சமுதாயத்திற்குத் தொண்டு செய்து, தான் பெற்ற கடனைத் தீர்க்கக் கடமைப்பட்டவராவர்.

சம்ஸ்காரங்கள் பதினாறினுள்ளும் திருமணமே முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இல்லறம் ஏனைய ஆசிரமங்களுக்கு ஆதாரமாய் விளங்குவதால் இந்து சாஸ்திரங்கள் இதனைப் புகழ்ந்துரைக்கின்றன. திருமணச் சடங்கின் நோக்கம் காம உணர்வைத் திருப்திப்படுத்துவ-தல்ல. புலனடக்கம், இல்லாளோடும் ஏனைய உறவினர்-களோடும் நல்லிணக்கத்தோடு வாழ்தல், சமுதாயத்திற்கு சேவை செய்தல் போன்றவை மூலம் இறை அனுபவத்தி-ற்கு இட்டுச் செல்லும் ஆன்மீக முன்னேற்றமே இல்லறத்தின் உண்மையான நோக்கமாகும். நான்கு புருஷார்த்தங்களிலும் கணவன், மனைவியரது கூட்டு முயற்சியே இல்லறமாகும். தர்மமே தம்பதியினரை இணைத்து வைத்துள்ளது. அதனா-லேயே இல்லற பந்தம் பிரிக்க முடியாததாகவும், புனிதம் வாய்ந்ததாகவும் இந்து சமயத்தில் கருதப்படுகிறது. இத் திருமணச் சடங்கு தந்தையால் செய்யப்படும் கன்னிகா-தானத்துடன் ஆரம்பமாகிறது. ஹோமத்திற்கான அக்கினி வளர்த்து, அப்புனித அக்கினியில் தகுந்த மந்திரங்களுடன் ஆகுதி செலுத்துதல் அடுத்த முக்கிய கட்டமாகும். மண-மகனால் மணமகளது கையைப் பிடிக்கும் ‘‘பாணிக்கிரக-ணம்’’ என்னும் அடுத்த சடங்கு, பெண்ணின் பாதுகாப்பு

தந்தையிடம் இருந்து கணவனுக்கு கைமாறுகிறது என்ப-தைக் காட்டுவதாகும். மணமக்கள் ஒன்றாக இணைந்து, ஏழு அடி எடுத்துவைக்கும் ''ஸப்தபடி'' என்னும் சடங்கு அடுத்த மிக முக்கிய கட்டம். இது திருமணத்திற்கு சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்குகின்றது. இப்போது மண-மகள் தன் கோத்திரத்தை (குடும்ப வம்சத்தை) விட்டு, மண-மகனின் கோத்திரத்திற்கு மாறுகிறாள். ''சூர்யலோக'' எனும் சூரியனை தரிசிக்கும் அடுத்த சடங்கு, திருமணத்திற்கு சூரியன் சாட்சியாக அமைகிறான் என்பதைக் காட்டுகிறது. திருமணச் சடங்கின் அடுத்த இரு பகுதிகளாகிய, ''அஸ்ம-ரோஹண'' எனும் அம்மி மிதித்தலும், ''அருந்ததி தர்ஸன'' எனும் அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுதலும், இத்திருமண பந்தம் உறுதியானது, நிலைத்தது என்பதன் அறிகுறிகள் ஆகும்.

மேற்கூறிய சம்ஸ்காரங்களில் கடைசி பகுதியாகிய ''அந்தியேட்டி'' என்பது, மரணத்தின் பின் உடலை எரிக்கும் சடங்காகும். பொருத்தமான சம்ஸ்காரங்களால் தன் வாழ்-நாள் முழுவதும் தன்னைத் தூய்மை செய்த ஒருவருக்கு, அவரது உறவினர்கள், அவரது ஆன்மாவின் எதிர்கால நன்மை கருதி செய்யும் சடங்கே அந்தியேட்டியாகும். இது ஒருவர் இறந்த பிறகு செய்யப்பட்டாலும், இதன் முக்கியத்-துவம் எந்த விதத்திலும் குறைந்ததல்ல. ஏனெனில், ஒரு இந்துவின் நோக்கில் மறுமை, இம்மையைவிட மிகமுக்கிய-மானதாக இல்லாவிட்டாலும், அது ஓரளவு முக்கியமானதே. இறப்பவரின் வாய்க்குள் புனித கங்கை நீரை விடுவதும், துளசி இலையை இடுவதும் வழக்கமான மரபாகும். இதன் பின்னர் சடலம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு குடும்ப வழக்கப்படிப் புதைக்கப்படும் அல்லது தகனம் செய்யப்படும். புதைக்கப்பட்டால் அவ்விடத்தில் நினைவுச் சின்னம் ஒன்று நிறுவப்படலாம். எரிக்கப்பட்டால், பின்னர் அஸ்தி சேகரிக்கப்பட்டு, ஆற்றில் அல்லது கடலில் கரைக்-கப்படும். ''சிராத்தம்'' அந்தியேட்டியின் முக்கிய சடங்காகும்.

மேற்குறிப்பிட்ட சம்ஸ்காரங்களுள், நாமகரணம், விவாகம், அந்தியேட்டி ஆகிய மூன்றும், செய்முறையில் சிறிய வேறுபாடுகள் இருந்தாலும், இந்து சமூதாயத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவானதாகும்.

## 27. இத்தகைய சம்ஸ்காரங்களால் ஒருவர் தூய்மை பெறுகிறார் எனக் கொண்டாலும், அவரின் தூய்மையைக் கெடுக்கும் காரணிகள் யாவை?

ஒருவர் தாயின் வயிற்றில் இருக்கும் போது உடலின் மாசுகளாலும், பிறந்த பின்னர் அஞ்ஞானத்தாலும் அசுத்த-மடைகிறார் என சாஸ்திரங்கள் இயம்புகின்றன. ஜாத கர்மம் ஒருவனது முன்னைய அசுத்தத்தையும், உபநயனமும் வேதப்பயிற்சியும் பின்னைய அழுக்கையும் நீக்குகின்றன.

## 28. இது தொடர்பாகப் பாவ புண்ணியக் கோட்பாட்டை விளக்க முடியுமா? இந்துக்களின் எல்லாப் பிரிவினரும் ஏற்றுக்–கொள்ளக் கூடிய தார்மீக ஒழுக்கக் கோவைகள் உண்டா?

எல்லா மதங்களிலும் புண்ணியம், பாவம், நன்மை, தீமை பற்றிய கோட்பாடுகள் உள்ளன. அடிக்கடி மேற்-கோளாகக் கூறப்படும் ஒரு பழமொழி, புண்ணியம் என்பது மற்றவர்க்கு நன்மை செய்தலும், பாவம் என்பது பிறருக்கு தீமை செய்தலும் ஆகும் எனக் கூறுகிறது. விலக்கப்பட்ட செயல்களைச் செய்யும் போதும், விதிக்கப்பட்ட கடமை-களிலிருந்து நழுவும் போதும் பாவம் சேர்கின்றது. இச்-செயல் ஒருவரது ஆன்மிக வளர்ச்சியைத் தடுத்து சமுதாய-த்தையும் கெடுக்கின்றது. ஒருவர் ஒருபோதும் பொய் பேசக் கூடாது என்பதும்,

எப்போதும் உண்மையே பேச வேண்டும் என்பதும் விதியாகும். ஒருவர் உண்மையை விடுத்து பொய் பேசும்போது பாவம் சேர்கின்றது.

இங்ஙனமே சாஸ்திரங்களில் கூறப்பட்ட கடமை-களையும், கர்மங்களையும் செய்யும் போது புண்ணியம் ஈட்டப்படுகின்றது.

இந்து சமய சாஸ்திரங்கள், சமுதாயத்திலுள்ள எல்லாப் பிரிவினருக்கும், உலகம் தழுவிய ஒழுக்க விதி-களைக் கூறுகின்றன. எல்லோருக்கும் பொதுவான சாமான்ய தர்மம் எனப்படும் அறநெறி விதிகளானவை, அகிம்சை, சத்தியம், அஸ்தேயம் (திருடாமை) தயை, தானம், திதிக்ஷை (சகிப்பு), வினயம் (பணிவு), இந்திரிய நிக்கிரகம் (புலனடக்-கம்), சாந்தி, சைளசம் (தூய்மை), தவம், பக்தி என்பன-வாகும். எல்லோருமே இவற்றை நன்கு கடைப்பிடிப்பார்-களேயானல் முழுச் சமூகமுமே உயர்ந்த அமைதியும் ஆனந்தமும் உடைய நிலைக்கு உயர்ந்துவிடும்.

## 29. இந்து சமுதாயத்தில் பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பங்கு யாது? பெண்ணுக்கு சம உரிமையுண்டா? எந்தளவு உரிமையை அவள் அனுபவிக்கிறாள்?

இந்து சமயம் பெண்களின் அந்தஸ்தையும், நிலைப்-பாட்டையும் இரண்டு நிலையிலிருந்து பார்க்கின்றது. பந்தத்-திலுள்ள ஆன்மா என்ற நிலையில், பெண்ணுக்கும் ஆணைப் போலவே மோட்சம் வாழ்வின் குறிக்கோளாகும். எனவே ஆணுக்குக் கூறப்பட்ட ஒழுக்கங்களான மனத்-தூய்மை, தன்னடக்கம், இறைபக்தி, எளிமை முதலியன அவளுக்கும் பொருந்துவதாகும். இவ்விதம் பெண்ணானவள் ஆணோடு ஒத்த உரிமை உடையவளாகின்றாள்.

இருப்பினும், உடலியலாலும், மனவியலாலும் பெண், ஆணிலிருந்து வேறானவள் என்ற உண்மை புறக்கணிக்கப்-படவில்லை. எனவே அவளிடம் குறிப்பிட்ட சில கடமை-களும், பொறுப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளதோடு, சில சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. குடும்பத்தை நடத்துவ-திலும், குடும்பத்தின் உட்பணிகளை நிர்வகிப்பதிலும் முக்கிய சக்தியாக விளங்கும் அவளது பாத்திரம் பெரிதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இல்லத்தை இல்லமாக்குபவள் இல்லாள் எனும் பழமொழி இக்கருத்தை நிரூபிக்கிறது. சிறந்த இல்லத் தலைவியாக வாழ்வதே இந்துப் பெண்-களின் இலட்சியமாகும். இலட்சிய மனைவி, இலட்சிய நண்பி, இலட்சியத் தாய் ஆகியவற்றின் மொத்த உருவ-கமே இல்லாள் ஆவாள். இவ்வாறு அவள் ஆணை நிறைவு செய்கிறாள். இல்ல நிர்வாகத்தில் பெண்ணே முக்கிய பங்காற்றுகிறாள்.

வேதகாலத்திலும், இதிகாசங்களின் காலத்திலும், பெண்கள் ஆண்களோடு சம சுதந்திரம் பெற்று வாழ்ந்தனர். சமய, ஆன்மிகத் துறைகளில் அவர்களுக்கு சம வாய்ப்புக்-கள் இருந்தன. அவர்கள் வேதங்களைக் கற்கவும், பூணூல் அணியவும், துறவு பூணவும்கூட உரிமை பெற்றிருந்தனர். ஆனால் இந்து சமுதாயமானது அந்நியரின் முற்றுகைக்கு எதிர்பாராத விதமாக உட்பட்ட போது, இந்த சுதந்திரம் குறைக்கப்பட வேண்டி வந்தது. இப்போது நாடு அரசியல் சுதந்திரம் பெற்றபின், அவர்கள் தம்மை உயர்த்திக் கொள்வதற்குப் போதிய சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், ஆணும் பெண்ணும் ஒருவரோடொருவர் போட்டியிடுபவர்கள் அல்லர். மாறாக, ஒருவரையொருவர் நிறைவுசெய்பவர்களே என்பதை அனை-வரும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

## 30. கால ஓட்டத்தில் இந்து சமயம் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியை நோக்கும்போதும், பலவித ஏற்றத்தாழ்வுகளைக் கடந்த நிலையிலும் அது

**இன்னும் ஒரு உயிர்த்துடிப்புள்ள சக்தியாக விளங்குவதை நோக்கும் போதும், இந்து சமயத்தில் நிலைத்து நீடிக்கும் அடிப்படை சக்தி ஒன்று இருப்பதை நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இச் சக்தியை நிலை நிறுத்துவதில் இந்து சமயத்தில் தோன்றியுள்ள பல சீர்திருத்தி இயக்கங்களுக்கு ஏதேனும் பங்கு உண்டா?**

அதில் சந்தேகமில்லை. இந்து சமயத்திற்கு அழிவற்ற குணாதிசயம் ஒன்றுண்டு. பல சீர்திருத்த இயக்கங்களால் இது நெடுங்காலமாக நிலைநிறுத்தப்பட்டும், பாதுகாக்கப்-பட்டும், வலுவூட்டப்பட்டும் வந்துள்ளது. இல்லையேல் புவி-யீர்ப்பு விசைப் பொம்மை போன்ற மீளும் தன்மையை அது பெற்றிருக்காது. அன்னிய மதம் மற்றும் கலாச்சாரத்தைச் சேர்ந்த மக்கள், பல நூற்றாண்டுகளாக, காட்டுமிராண்டித்-தனமாகப் படையெடுத்தும் இந்து சமயத்தையும் அதன் கலாசாரத்தையும் அது நிலைத்த மண்ணிலிருந்து அழிக்க முடியவில்லை. மாறாக, அந்த அதிர்ச்சி அலைகள் ஓய்ந்ததும், இந்த அன்னிய சக்திகளும் இந்திய சமுதாய அமைப்பில் அமைதியாக உள்வாங்கப்பட்டுவிட்டன. இந்து சமயத்தின் இச்சிறப்பியல்பிற்குக் காரணம், நெருக்கடியான கால கட்டங்களில் தோன்றி, இந்து சமுதாயத்திற்குத் தேவையான ஒளியையும், ஞானத்தையும், உத்வேகத்தை-யும் வழங்கிய சமய கலாசாரத் தலைவர்களே ஆவர்.

குறிப்பிடும்படியான எந்த சமுதாயமும், உறுதியாக-வும், ஆரோக்கியமாகவும் வாழ விரும்பினால், அது தனது குடிமக்களுக்கு, தன்னுள் ஆழவும், ஆக்கபூர்வமாக விமர்-சிக்கவும் தேவையான சந்தர்ப்பத்தையும், வசதியையும் தாரளமாக வழங்கவேண்டும். இது அதனுடைய பலவீனங்-களை ஆராயவும், அவற்றை அகற்றவும் உதவுகின்றது. அவ்வாறே அதன் சிறப்பியல்புகளை அறியவும், அவற்றை மேலும் வலுப்படுத்தவும் உதவுகிறது. இந்து சமுதாயம், தன்னகத்திலுள்ள குழுக்களுக்கும், தனிமனிதனுக்கும், இணக்கமற்று அல்லது ஆக்கபூர்வமாக விமர்சிப்பதற்கு, தேவையான சுதந்திரத்தையும், வாய்ப்பையும் பலநூறு ஆண்டுகளாக வழங்கி வந்துள்ளது என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இத் தனிப் பெருந்தன்மைதான் இந்து சமயத்தை சக்தி வாய்ந்ததாகவும், உயிருள்ளதாக-வும் வைத்துள்ளது. எனினும் இச்சுதந்திரம், சில காலமாக நடந்து வருவதைப் போன்று, உட்பகையைத் தோற்றுவிக்-கும் வகையில் தவறாக பயன்படுத்தக்கூடாது.

## 31. இந்த முக்கிய சீர்திருத்த இயக்கங்கள் எவை?

அனைத்து சீர்திருத்த இயக்கங்களுக்கும் முன்-னோடிகளாக விளங்கியவர்கள் உபநிஷத கால ரிஷிகளே-யாவர். எல்லோரும் பின்பற்றத்தக்க எளிமையும், சிறப்பும் வாய்ந்த இருக்கு வேத சமயமானது, பிராமணம் எழுதப்பட்ட காலப்பகுதியில், பொதுமக்களால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு, குழப்பம் நிறைந்த வேள்விகளாக தாழ்ந்து விட்டிருந்தது. எனவே, இம்முனிவர்கள் அவற்றை ஒதுக்கி, ஆத்மஞானத்தையும், ஆத்மதியானத்தையும், நமது சமயத்-தின் சாரமாக ஆதரித்துக்கூறி சமயத்தைக் காத்தனர்.

இரண்டாவது சீர்திருத்தம் பகவான் கிருஷ்ணரால் தொடங்கப்பட்டது. கிருஷ்ண பகவான், ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பக்தி மார்க்கம் ஆகிய ஆன்மிக மார்க்கங்-களுக்கிடையே நிலவிய உயர்வு, தாழ்வு போன்ற பிணக்கு-களை முற்றிலும் களைந்து, பலவகைப்பட்ட ஆன்மிக சாதனைகளுக்கிடையே சமநிலையையும், சமரசத்தையும் உண்டாக்கினார். இருப்பினும், கடமைக்காக கடமை செய்து, சமுதாய நலனுக்கு உதவும்படி அறைகூவல் விடுத்ததே அவரது

சிறந்த பங்களிப்பாகும். அவரது ஓய்வற்ற, செயல்திறன் மிக்க வாழ்வே, அவர் போதித்த தத்துவத்திற்கு ஒரு தலைசிறந்த முன்மாதிரியாகும்.

மூன்றாவது சீர்திருத்த இயக்கம் மகாவீரராலும், புத்தராலும் தொடங்கப்பட்டதாகும். சமயத்தில் நிலவிய வரண்ட, பயனற்ற தர்க்கத்தை நீக்கி, பதிலாக, இங்கே, இப்போதே, அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கக் கூடிய எளிமையான, உயிரூட்டும் ஒழுக்க, நீதி நெறிகளை அவர்கள் போதித்தனர்.

இருப்பினும், காலகெதியில் அவர்களது போதனை-கள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும், தவறாகப் பிர-யோகிக்கப்பட்டும் வந்தன. இதன் விளைவாக பெருமளவு மக்களால் வேதநெறி கைவிடப்பட்ட நிலையில், ஆதிசங்கரர் தோன்றி, சனாதன தர்மத்தை புனருத்தாரணம் செய்து, அதனை மீண்டும் ஸ்தாபிதம் செய்தார். அவரது பணி நான்காவது சீர்திருத்தமாகும்.

இதன்பின் பல அநாகரிக இனங்களின் ஊடுருவல்-களால் சமுதாயத்திலும், சமயத்திலும் பல தாக்கங்கள் ஏற்பட்டன இத்தகைய நெருக்கடியான கால கட்டத்தில்-தான் இராமனுஜர், மத்வர், வல்லபர், சைதன்யர், சங்கர-தேவர், பசவர், இராமானந்தர், கபீர், துளசிதாசர், மீரா, துக்காராம், புரந்தரதாசர் போன்ற பல மகான்கள் தொடர்-ச்சியாகத் தோன்றி, எமது சமயத்தையும், கலாசாரத்தையும் சமூகத்தையும், பலமான அன்னிய தாக்குதலிலிருந்து காத்தனர். பக்தி வழியைப் பரப்பிய இவர்கள் தோன்றியிரா-விட்டால் இந்து சமயமானது தனது நாட்டிலிருந்தே மறைந்திருக்கும். இதுவே ஐந்தாவதாக வந்த சீர்திருத்த இயக்கமாகும்.

இந்தியா ஆங்கிலேயரிடம் தனது உரிமையை இழந்த 19ம் நூற்றாண்டில், மேலை நாடுகளிலிருந்து திட்ட-மிட்டு இறக்குமதி செய்யப்பட்ட சமய கலாசாரத்தினால் வேறுபட்ட ஒரு பிரச்சினை தோற்றுவிக்கப்பட்டது. இதன் எதிர்விளைவாக ஆறாவது சீர்திருத்த இயக்கம் தோன்றி-யது. இவ்வியக்கத்தில் முக்கிய தலைவர்களாக இராஜராம் மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, மகாதேவ கோவிந்த ரானடே, அன்னிபெசன்ட், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் என்போராவர்.

இடையறாத புரட்சிகரமான முயற்சியினால் சனாதன தர்மமானது, மீண்டும் தனது ஸ்திர நிலையை அடைந்தது மட்டுமல்ல, மேலைநாட்டுக் கலை, கலாசாரக் கொத்தளத்-துக்குள்ளும் பிரவேசித்து விட்டது. இந்த சீர்திருத்தம், ரமண மஹரிஷி, அரவிந்தர் போன்ற மகான்களாலும், பல சமய கலாசார இயக்கங்களாலும் மேலும் வலுவடைந்து உள்ளது.

## 32. இந்த சீர்திருத்த இயக்கத்தில் நமது மடங்களும், சமய ஸ்தாபனங்களும் பங்கு கொள்கின்றனவா? ஏனோ அவர்கள் இந்த சீர்திருத்தப் பணிக்கான கருவிகளாக விளங்குவதாகத் தெரியவில்லை. எவ்வாறு இவர்களை மீண்டும் துடிப்பு உள்ளவராக்கி இயங்க வைப்பது?

இன்றுள்ள புதிய மடங்களும், சமய நிறுவனங்களும், சமீபத்திய சீர்திருத்த இயக்கங்களின் நேரடி வெளிப்பாடு-களாகும். உதாரணமாக பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண மிஷன் என்பன.

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பணி-கள் புரிந்துள்ள பாரம்பரிய வைதீக மடங்கள் இன்னும் சிறப்பாக பணிபுரிந்திருக்கலாம் என்றே கொள்ளவேண்டும். இப்பொழுதும், எழுச்சிமிக்க இந்து சமுதாயத்தின் எதிர்பார்-ப்புக்கேற்ப, சில மடங்களைத் தவிர, பெரும்பாலானவை திருப்தியான பணிகளைப் புரியவில்லை. ஒரு காலத்தில் தமது தவ வாழ்வினாலும், ஞானச் செல்வத்தினாலும், சமுதாயத்தின் கலங்கரை விளக்காக விளங்கிய மடாதிபதி-கள்,

பணத்திலும், அதிகாரத்திலும் மோகம் கொண்டு, படிப்படியாக செயலற்ற நிலைக்கு வந்து விட்டனர். இவர்-கள் தமது பணியை, குறிப்பிட்ட தங்களது சாதிக்கும் சமய சம்பிரதாயத்துக்குள்ளும் வரையறை செய்து விட்ட-னர். இவையெல்லாம் நமது சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு வழி கோலின. இந்த மடங்களெல்லாம், தங்கள் நலன் கருதியும், இந்து சமுதாயத்தின் நலன் கருதியும், சமுதாய மாற்றங்-களுக்கேற்ப தம்போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும்.

நமது பாரம்பரிய மடங்கள், பின்வரும் துறைகளில் தீவிரமாகப் பணியாற்ற முடியும். நமது சமய, கலாசாரத்தின் முக்கியமான அம்சங்களைப் பரப்புதல்; அனைத்து இந்துக்-களும் பின்பற்றக் கூடிய வகையில், பலதரப்பட்ட சமய சடங்கு மற்றும் கிரியைகளையும், மற்றும் சம்ஸ்காரங்-களையும், எளிமைப்படுத்தி வகுத்தல்; இந்துக்களின் தனி மனித வாழ்க்கைக்கும், சமுதாய வாழ்க்கைக்குமான நடத்-தை நெறிகளை உருவாக்கல்; தீண்டாமையை மட்டுமன்றி சாதிப் பிணக்குகளையும் நீக்குவற்கு, தீவிர பிரச்சாரப் பணி-களில் இறங்குதல் முதலியன. வழமையான உலகியல் கல்வியோடு, ஆன்மிக விழுமியங்களையும் நன்கு நல்கக் கூடிய கல்வி நிலையங்களை உருவாக்கல் மற்றுமொரு அத்தியாவசிய பணியாகும்.

தற்காலத்தில் சில மடங்களில் இத்தகைய எழுச்-சியும், மறுமலர்ச்சியும் தோன்றியிருப்பது உற்சாகமூட்டுவதாக உள்ளது. இவற்றின் பயனை நமது சமுதாயம் விரைவில் அறுவடை செய்வதை நாம் ஆர்வமுடன் எதிர்பார்க்கலாம்.

## 33. ஓர் இந்துவின் தினசரிக் கடமைகள் எவ்வாறு அமைய வேண்டும்?

ஓர் இந்துவின் சீரிய தினசரி வாழ்வினை பின்வருமாறு கூறலாம். சூரிய உதயத்துக்குமுன் நித்திரை விட்டெழுதல், குலதெய்வத்தையும், இஷ்ட தெய்வத்தையும் வணங்குதல், காலைக் கடன் கழித்து நீராடி பிரார்த்தனை செய்தல், பாராயணமும் தியானமும் செய்தல், குல தெய்வத்திற்கு நைவேத்தியம் சமர்ப்பித்து காலை உணவை உட்கொள்-ளல். தொழிலுக்கேற்ற கடமைகளைப் புரிதல், தர்மத்திற்கு விரோதமின்றி குடும்பத்தைப் பாதுகாத்தல், இரவு உணவு-க்கு முன்னர் குடும்பத்தவர்கள் எல்லோரும் கூடி பூஜை அறையில் பிரார்த்தனை செய்தல், படுக்கைக்கு போகுமுன் குல தெய்வத்தை பிரார்த்தனை செய்தல் என்பன.

இவை தவிர, வாரமொருமுறை சமீபத்திலுள்ள கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் விரும்பத் தக்கது. ஒருசில விசேட நாட்களையாவது தூய்மையோடு பக்தி பூர்வமாகக் கொண்டாட வேண்டும். வசதி போல குடும்பத்-தோடு புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்வது நன்மை பயக்கும். மேலும் போகும் இடங்களில் தன் வசதிக்கேற்ப தானதர்மம் செய்வதும் போற்றத்தக்க செயலாகும். எல்லா-வற்றையும்விட தனிமனித வாழ்விலும், சமுதாய வாழ்விலும் ஒரு இலட்சிய இந்துவாக நேரிய ஒழுக்க சீலராக வாழ்க்கையை நடத்த முயற்சிக்க வேண்டும்.

## 34. இந்து சமுதாயமானது இப்போது ஒரு திருப்பு முனையில் இருப்பதாகத் தோன்றுகிறது. இந்து சமயத்தின் நிலையான உண்மைகளின் அடிப்படையில் ஒரு புதிய இந்து சமுதாயத்தைக் கட்டி எழுப்ப நாம் ஆற்றவேண்டிய பணிகள் யாவை?

முதலாவதாக, முற்பகுதிகளில் கூறியது போல அறநெறிகளோடு கூடிய வாழ்க்கையை நாம் வாழவேண்டும். நமது சமுதாயத்தை மீளமைப்புசெய்ய வேண்டிய சக்தியை இது வழங்கும்.

இரண்டாவதாக, உடல், அறிவு மற்றும் ஆன்மிக பலத்தை நாம் பெருக்க வேண்டும். இம்மூன்று சக்தியையும் இணைத்து ஒழுக்கமாகிய சக்தியை நாம் உருவாக்க வேண்டும். எல்லா உட்பூசல்களையும் தவிர்த்து, வேற்றுமை-யில் ஒற்றுமை காண்பதே இக்காலக் கட்டத்தின் தேவை-யாகும். உடற்பயிற்சி நிலையங்கள் அமைத்தல், சமயக் கருத்துக்களைப் பரப்ப, சமய கருத்தரங்குகளை நடத்து-தலும், பிரதான ஆலயங்களில் வாரத்தில் ஒரு தடவையா-யினும் கூட்டுப்பிரார்த்தனைகள் செய்தல் ஆகிய இம்மூன்று செயற்பாடுகளின் மூலம் நாம் மேற்கூறிய மூவகைப் பலத்தையும் பெற முடியும்.

மூன்றாவதாக, நமது சமுதாயத்தில், கல்வி அல்லது கலாசாரம் அல்லது செல்வம் ஆகியவற்றில் வளர்ச்சியடை-ந்துள்ளவர்கள், அவற்றைப் பெறாது பின் தங்கியுள்ள-வரைத் தாம் பெற்றுள்ள முன்னேற்றத்திற்கு இணையான நிலைக்குக் கொண்டு வருவதற்கு விசேட முயற்சிகளை எடுக்கவேண்டும். சமுதாயம் முழுவதும் ஒரே குடும்பம் எனும் உணர்வை வளர்க்கவேண்டும். குடும்பத்தில் மூத்த-வர்கள் இளையவர்களுக்கு உதவுவது போல் சமுதாயத்-தில் பின்தங்கியவர்களுக்கு உதவுவது எமது கடமை என உணர வேண்டும். இல்லையேல், பல நூற்றாண்டுகளாக சுரண்டப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் நம்மை முற்றிலும் கைவிடும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. இதற்கான பொறுப்பு முழுவதும் முன்னேறியுள்ளவர்களையே சார்ந்து உள்ளது.

நான்காவதாக, அறியாமையினாலும், எமது கொடு-மையினாலும், இந்து சமுதாயத்தை விட்டுச் சென்ற மக்களை அன்போடும், ஆதரவோடும் வரவேற்று அவர்-களுக்குரிய அந்தஸ்தையும், பாதுகாப்பையும் வழங்கி ஆதரிக்க வேண்டும்.

புதிய இந்து சமுதாயத்தை அமைப்பதில், அனைத்து சாதி, சம்பிரதாய, குழுக்களைச் சார்ந்த தலைவர்கள் ஆற்றவேண்டிய கடப்பாடு மிகப் பெரியதாகும். அவர்கள், ஒவ்வொரு இந்துவும் தான் ஒரு இந்து என்றும், தான் ஒரு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவன் என்றும் உணர, எல்லா இந்துக்களுக்கும் பொதுவான ஒருசில எளிய சம்ஸ்காரங்-களைக் கூடிய விரைவில் ஏற்படுத்த வேண்டும். சுவாமி விவேகானந்தர், இந்து சமுதாயத்தில் சூத்திரர் என்போர் இருந்ததில்லை என்று ஒருமுறை கூறினார். தகுந்த சம்ஸ்-காரங்கள் இல்லாமையினால், இருபிறப்பாளர் நிலையை இழந்துவிட்டவர்களே விரத்தியர் எனப்படும் சூத்திரரும் ஏனையோருமாவர். எனவே அவர் எல்லோருக்கும் பூணூல் அணிவித்து இருபிறப்பாளராக்க வேண்டும் எனக் கூறினார். இந்தத் திட்டம், இவ்விடயத்தோடு தொடர்புடைய அனை-வரினதும் தீவிர ஆலோசனைக்குரிய நிகழ்ச்சியாகும்.

### 35. இறுதியாக, ஏனைய மதங்களிடத்து இந்துக்களின் அணுகு- முறை எப்படிப்பட்டதாக அமைய வேண்டும்?

வேறுபட்ட மதங்களெல்லாம் ஒரு வட்டத்தின், தெய்வீக அனுபவம் என்னும் மையத்தை நோக்கிச் செல்-கின்ற வேறுபட்ட ஆரங்கள் என்பதே ஒரு இந்துவின் கருத்-தாக இருக்கவேண்டும். ஸ்ரீராமகிருஷ்ணர் இதனை இன்னும் விரிவுபடுத்திக் கூறுகின்றார். “எத்தனை மனிதர்களோ அத்தனை மதங்கள்” என்பதன் மூலம் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் ஒவ்வொரு மதம் இருக்கிறது என்பது கருத்-தாகும். இங்கு சமயம் என்பது கடவுளை உணர்வதற்கு இட்டுச் செல்லும் வழியாகும்.

இருப்பினும், மற்ற மத பக்தன் தன் மதமே தனக்கு பொருத்தமானது என நினைப்பது போல, ஒவ்வொரு இந்துவும் தன் சமயமே தனக்குப் பொருத்தமானது என நினைக்கின்றான். “உன்னுடையது உனக்கு, என்னுடையது எனக்கு” என்பதே இந்த அணுகுமுறையாகும். ஒவ்வொரு-வரும் தத்தம் மதங்களைச் சரியாக உணர்ந்து முறை-யாகக் கடைப்பிடிப்பார்களேயானால் மோட்ச

சாம்ராச்சியம் இங்கே, இப்போதே அமைந்து விடும். மனித வரலாற்றில் அத்தகையதொரு பொற்காலம் உதயமாகட்டும் என்று நாம் பிரார்த்திப்போமாக.

3sok1